புதுக்கோட்டை ஸமஸ்தான

# தேசீய யுத்த முன்னணி நிலயம்.

பிரசுரம்] 1942-ம் ௵ ஜூன் ௴ 13௳ [ந. 99

பிரஸங்கம் XCIX.

# வெற்றியை முன்னிட்டு பிரிடிஷ் விமானப் படை சண்டையில் ஈடுபடும் விதம்.

பீடர் G. மேஸ்பீல்டு M. A., A. F. R. Ae. S. எழுதியது.

(இல்லஸ்டிரேட்ட் லண்டன் நியூஸ் பத்திரிகையிலிருந்து எடுக்கப்பட்டது).

## பிரிடன்மேல் நடந்த கடும் யுத்தத்தால் பலவிதமாக மாறி பலமடைந்தது.

கிரேட் பிரிடன் இதற்குமுன் இருந்ததைவிட தற்சமயம் அதிக பலம் பெற்றிருக்கிறது. அங்குள்ளோர் யாவரும் ஸ்வதந்திரக் கோட்டைக்குள்ளிருப்பது போல் எண்ணிக்கொண்டும், ஒற்றுமையுடனும், எதிரியைத் தோற்கடிப்பதற்கான தீர்மானத்துடனும் இருக்கிறார்கள். பிரிடிஷ் விமானப்படையைச் சேர்ந்த பாம்பர்களும், பைடர்களும் இரவும், பகலும் எதிரி நாட்டினுள் புகுந்து வர வரக் கடுமையாகவே தாக்கிவருகின்றன. பிரிடிஷ் விமானப்படை 1940-ம் வருஷத்தில் பிரிடன்மேல் நடந்த விமானச் சண்டையில் பல மாறுதலும், அனுபவமும் பெற்று முழு தைரியத்துடன் மறுபடி முன்னேறித் தாக்குதலை ஆரம்பித்திருக்கிறது. ஸ்வதந்திரத்தை விரும்பும் மக்களின் ஊக்கம் படைத்திருக்கிறது. அமெரிக்கர்களின் உதவி பூர்ணமாக இருக்கிறது. இவ்வித சந்தர்ப்பங்களில் பிரிடிஷ் விமானப்படை பிரதி தினமும் பலமடைந்து வெற்றியை நோக்கி சண்டை செய்துவருகிறது.

## பிரிடிஷ் விமானப்படையும், ஜெர்மன் லுப்ட்வாபி விமானப்படையும்.

அக்காலத்திய யுத்த சரித்திரம் எழுதப்படுமேயானால், ஜெர்மன் லுப்ட்வாபியை பிரிடிஷ் விமானப்படை தோற்கடித்ததைப்பற்றி பிரத்தியேகமாக ஒரு அத்தியாயம் எழுதப்படும். ஏனென்றால் அந்த சண்டையில் அடைந்த வெற்றியினால் தான் இங்கிலாந்தின் நிலைமை சாதகமாகி ஸ்வதந்திரத்தை உலகெங்கும் ஸ்தாபிக்க முடிந்தது. அக்கடும் யுத்தத்தில் ஜெர்மன் விமானப்படையின் பலத்தைக் கீழ்ப்படுத்தியதோடுமல்லாமல் விமான ஆதிக்கமே பிரிடிஷார் கைக்கு வந்தது. அந்த பலத்தைக்கொண்டுதான் தற்சமயத்தில் ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகள்பேரிலும், ஜெர்மனியின் உள் நாட்டிலும் தாக்குதல்கள் செய்யப்படுகின்றன. முடிவான வெற்றியடையும் வரை இத்தாக்குதலில் கொஞ்சமும் குறைவு ஏற்படாது. யுத்தம் ஆரம்பித்தது முதல் 1941-ம் ௵ ஜூன் ௴ முடிய 6,041 ஜெர்மன் லுப்ட்வாபி விமானங்களும், 660 இதாலிய விமானங்களும் பிரிடிஷ்

விமானப்படையால் சுட்டு வீழ்த்தப்பட்டிருக்கின்றன. அக்காலவரையில் பிரிடிஷாருக்கு 2,185 விமானங்களே நஷ்டம். அதாவது கிட்டத்தட்ட ஒரு பிரிடிஷ் விமானத்திற்கு 3 எதிரி விமானங்கள் வீதம் நஷ்டமாக்கப்பட்டிருக்கிறது!

### விமான ஆதிக்கம் அடைந்ததற்குக் காரணங்கள்.

நாம் விமான ஆதிக்கம் அடைந்ததற்கு மூன்று காரணங்கள் இருக்கின்றன. நமது விமானப்படையிலுள்ள ஸ்பிட்பையர், ஹரிகேன், வெல்லிங்டன் போன்ற ஒவ்வொரு விமானமும் பிரத்தியேகமான சக்திவாய்ந்தவை. எதிரியின் Me. 109 டார்னியர், யூஙகர்போன்ற விமானங்களுக்குச் சமமானவை. அடுத்தபடியாக பிரிடிஷ் விமான மாலுமிகளுக்கும், விமான ஓட்டிகளுக்கும், தரையிலும், ஆகாயத்திலும் பூர்ண பயிற்சி கொடுக்கப்படுகின்றது. மூன்ருவதாக, விமானப்படை தயாரிக்கும் தந்திர திட்டங்களெல்லாம் தகுந்த அதிகாரிகளால் நடத்தப்படுகின்றன இவ்வித அதிகாரிகளுக்கு பிரிடிஷ் விமான இலாகாவில் தகுந்த அனுபவம் இருக்கிறது. ஜெர்மனியிலோவெனில் 1918-ம்௵ முதல் 1934-ம்௵ வரை விமானிகளுக்கு ஒருவித அனுபவமும் கிடையாது.

### பிரிடன்பேரில் நடந்த விமானச் சண்டை.

நாம் முன் சொன்ன நற்காரணங்களின் பயனுக 1940-ம்௵த்தில் ஆகஸ்டு௴ முதல் ஸெப்டம்பர்௴வரை நடந்த 7 வாரச் சண்டையில் பிரிடிஷ் விமானப்படை மிகவும் திருப்திகரமாக நடந்துகொண்டது. ஜெர்மன் முன்னேற்றம் தடைப்பட்டது. இவ்விதம் நடந்த சண்டையைத்தான் பிரிடன் சண்டை, அல்லது பிரிடன் மேல் நடந்த விமானப்போர் என்கிருர்கள். ஆகஸ்டு௴ 8௳ முதல் ஸெப்டம்பர்௴ 27௳ வரை ஜெர்மன் லுப்ட்வாபி படையின் 989 பைடர் விமானங்களும், 1,123 பாம்பர் விமானங்களும் சுட்டு வீழ்த்தப்பட்டன. 573 பிரிடிஷ் ஃபைடர் விமானங்கள்தான் நஷ்டம். 5,261 ஜெர்மன் விமானிகள் நஷ்டம். 290 பிரிடிஷ் விமானிகள் நஷ்டம்.

### நாஸிகளின் பொய்ப் பிரசாரம்.

உண்மை இவ்விதமிருக்க ஜெர்மன் அரசாங்கத்தார் கொடுக்கும் கணக்கு விசித்திரமாகவே இருக்கின்றது. சில சந்தர்ப்பங்களில் நம்பமுடியாத கணக்குகளையே கொடுக்கிருர்கள். உதாரணமாக, 1940-ம்௵ ஆகஸ்டு௴ 15௳ வெளிவந்த ஜெர்மன் கம்யூனிகேயில் 143 பிரிடிஷ் விமானங்கள் நாசமானதாகவும், 32 ஜெர்மன் விமானஙகள் நஷ்டமானதாயும் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில் 18, ஜெர்மன் விமானங்களும், 34 பிரிடிஷ் பைடர் விமானங்களும் சேதம். அதிலும் 17 பிரிடிஷ் மாலுமிகள் தப்பினர். இதில் ஆச்சரியம் என்னவென்ருல், 49 லுப்ட்வாபி விமானங்கள் பிரிடனிலேயே சிதறிக்கிடக்கும்பொழுது 32 விமானங்கள்தான் நஷ்டம் என்று ஜெர்மானியர்கள் சொல்லுகிருர்கள். அடுத்தபடியாக அக்டோபர்௴ 15-ம் தேதி இரண்டு இரவுகால பாம்பர்கள் நஷ்டமானதாக ஜெர்மானியர்கள் சொன்னுர்கள். இதுவும் முழுப்பொய். ஏனென்ருல் ஹார்விச், பிஷப், ஃடாட்போர்டு, புரோம் (Frome) டென்பி இந்த நகரங்களிலேயே நான்கு ஜெர்மன் விமானங்கள் எறிந்துகிடந்தன.

பிரிடிஷார் கொடுக்கும் கணக்குகளெல்லாம் எவ்வித பரிசீலனையிலும் உண்மையாகவே இருக்கும். ஜெர்மானியர் கணக்கு அவ்விதம் இருக்காது. பிரிடன்மேல் நடந்த விமானச் சண்டையின்போது நடந்த பகற்கால சண்டையை எடுத்துக்கொள்ளுவோம்.

### எதிரியின் பகற்கால விமானங்களின் தோல்வி.

பிரான்ஸ் விழுந்ததும் போலந்து, ஹாலந்து, பெல்ஜியம், பிரான்ஸ் முதலிய நாடுகளை வசப்படுத்தியதுபோல சுலபமாக யுத்தத்தை முடித்துவிடலாம் என்று ஜெர்மன் அதிகாரிகள் நினைத்தனர். முதலில் ஜெர்மன் லுப்ட்வாபி விமானப்படை லக்ஷியங்களைத் தாக்கி, தரைப்படைகள் உட்புகுவதற்குச் சௌகரியமாகச் செய்வதென்பது சகஜமாக இருந்தது. இம்முறையைக்கொண்டும், அதிக

நம்பிக்கையுடனும் கென்ட் கடற்கரையோரமாக ஜெர்மன் விமானப்படை பிரமாதத் தாக்குதலைச் செய்தன. மூன்று வெற்றிகரமான சண்டைகளையும் செய்தது. அதன் பாய்ச்சல் பாம்பர்களெல்லாம் தீவிரமாகத் தாக்கின.

அவ்விதத் தாக்குதலை பிரிடிஷ் விமானப்படையின் பைடர் விமானங்களே எதிர்த்து நின்றன. ஏராள எதிரி விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. தென் இங்கிலாந்து பிரதேசம் பூரா எதிரி விமானங்களாகச் சிதறிக்கிடந்தன. அக்டோபர் மாதத்திற்குள் பிரிடிஷாரின் வெற்றி பூர்த்தியாயிற்று.

அவ்விதம் அடைந்த வெற்றிக்குக் காரணமாக மூன்று தினங்களில் யுத்தம் கடுமையாக நடந்தது. ஆகஸ்டுமீ 15-ம் தேதி பிரிடிஷ் விமானப்படை 181 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தியது. 34 பிரிடிஷ் விமானங்களே நஷ்டம். ஸெப்டம்பர்மீ 15-ம் தேதி பிரிடிஷ் பைடர் விமானங்கள் 185 எதிரி விமானங்களைச் சுட்டு வீழ்த்தின. 25 எதிரி விமானங்கள் சேதம். ஸெப்டம்பர்மீ 27-ம் தேதி 133 ஜெர்மன் விமானங்களும், 34 பிரிடிஷ் விமானங்களே சேதம். இதைப் போல் ஆகஸ்டுமீ 11உ முதல் 17உ வரையுள்ள வாரம்தான் மிகவும் விசேஷமானது. அக்காலத்தில் 495 ஜெர்மன் விமானங்கள் சுட்டுவீழ்த்தப்பட்டன. 115 பிரிடிஷ் பைடர் விமானங்கள் நஷ்டம். அதே வாரத்தில் ஜெர்மனிக்கு 1,204 பைடர் விமானங்கள் நஷ்டம். 58 பிரிடிஷ் மாலுமிகளே நஷ்டம்.

## யுத்தத்தின் பயன்கள்.

அப்பொழுது அடைந்த வெற்றியினால் யுத்தத்தின் போக்கே மாறிவிட்டது. அவ்வித வெற்றிக்குக் காரணமாக ஒப்பில்லாத தைரியமும், விமானங்கள், விமானிகள் இவர்களுடைய நுட்பமான சக்தியும்தான் காரணமாயிருந்தன. இந்த யுத்தத்தின் ஆரம்ப காலத்தில் Ju. 87 என்ற யூங்கர் விமானங்களை அதிக ஆதாரமாக ஜெர்மானியர் கொண்டிருந்தனர். போலந்து, பிரான்ஸ் முதலிய இடங்களில் வெற்றியையும் அடைந்தனர். ஆனால் நமது பைடர் விமானங்களைக் கொண்டு எதிர்த்தால், யூங்கர் விமானங்களால் சமாளிக்கமுடியாது. உதாரணமாக யூங்கர் அல்லது ஸ்தூகா விமானத்திற்கு மணிக்கு 390 கிலோமீடர்தான் வேகம் உண்டு. ஆனால் பிரிடிஷ் ஹரிகேன் விமானங்களுக்கு 540 கிலோமீடர் வேகமும், ஸ்பிட்பைர் விமானத்திற்கு 590 கிலோமீடர் வேகமும் உண்டு. மேலும் ஸ்தூகா விமானங்களின் சிறகுகளில் நிரந்தரமாக இரண்டு பீரங்கிகளும், பின்னால் நகர்த்தி சுடக்கூடியதாக ஒரு பீரங்கியும் உண்டு. பிரிடிஷ் ஸ்பிட்பைர், ஹரிகேன் போன்ற விமானங்களுக்கு 8 பீரங்கிகள் இருப்பதால் யூங்கர் விமானங்களைச் சுட்டுவீழ்த்துவதில் ஆச்சரியமில்லை.

மெஷர்ஷிமிட்ஸ் Me 109E போன்ற பைடர் விமானங்களை ஜெர்மானியர் உபயோகித்த காலத்திலும் பிரிடிஷ் பைடர் விமானங்கள் அவைகளுக்கும் மேலான சக்தியுடனேயே இருந்து சண்டை செய்தன. ஏனென்றால் Me 109E என்ற மெஷர்ஷிமிட்ஸ் விமானத்தைக் காட்டிலும் 20 கிலோமீடர் அதிக வேகத்துடன் கூடியது. Me 109E விமானத்தில் இரண்டு பீரங்கிகளும், இரண்டு யந்திர பீரங்கிகளும்தான். நிமிஷத்திற்கு 1,580 தடவைகள்தான் சுடமுடியும். ஆனால் ஸ்பிட்பைர் விமானத்தில் சிறகுகளிலேயே 8 யந்திர பீரங்கிகள் இருப்பதால் நிமிஷத்திற்கு 9,600 தடவைகள் சுடமுடியும். நிமிஷத்திற்கு பிரிடிஷ் விமானத்திலிருந்து 136 கிலோகிராம் கனமுள்ள குண்டுகள் போடமுடியும். ஜெர்மன் விமானத்திலிருந்து 82 கிலோகிராம் கனமுள்ள குண்டுகள்தான் போடமுடியும். இவ்விதமாக பிரிடிஷ் விமானங்களுக்கு வேகமும், தாக்கும் சக்தியும் அதிகமாக இருக்கின்றன. மேலும் விசைகளின் அமைப்பிலும் ஒரு சாதகம் இருக்கிறது. பிரிடிஷ் விமானங்களுக்கு பெரும் சிறகுகளும், குறைந்த கனமும் இருப்பதால் சுலபமாகவும், சீக்கிரமாகவும் இங்குமங்கும் திருப்பிக்கொண்டு சாதகமாகச் சண்டை செய்ய முடியும். ஜெர்மன் விமானங்களுக்கு அவ்வித சாதகம் கிடையாது.

## சமீபத்தில் செய்த சில மாறுதல்கள்.

சமீபத்தில் ஸ்பிட்பைர் விமானத்திலும் மெஷெர்ஷிமிட்ஸ் விமானத்திலும் சில புதிய மாறுதல்கள் செய்யப்பட்டன. அப்பொழுதும் ஸ்பிட்பையர் விமா

னத்தில்தான் அதிக சாதகமான அம்சங்கள் காணப்படுகின்றன. ஏனென்றால் அவைகளில் இரண்டு பிரங்கிகளும் நான்கு யந்திர பீரங்கிகளும் பதிக்கப் பட்டிருக்கின்றன. வேகமும் மணிக்கு 650 கிலோமீடருக்கு அதிகப்படுத்தப் பட்டிருக்கிறது. ஆனால் Me 109F விமானத்திற்கு 620 கிலோமீடர் வேகமும் உயரப்பறக்கும் சக்தியும்தான் அதிகமாகியிருக்கின்றன. தாக்கும் சக்தி அதிகமாக வில்லை. அதில் ஒரு பீரங்கியும் 2 யந்திர பீரங்கிகளும் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே எல்லாவிதத்திலும் ஜெர்மன் விமானங்களைக் காட்டிலும் பிரிடிஷ் விமானங் கள் மேலானவை.

பிரிடிஷ் விமானப்படையில் ஸ்பிட்பையர் விமானம் அதிக முன்னேற்றத் துடன் கூடியது. இதைத் தவிர வேறு வகைகளும் இருக்கின்றன. ஹாகர், டார்னடோ, டிபூன் முதலிய ஒரு ஆள் ஏறிச் செல்லக்கூடிய பைடர் விமானங்கள் Me 109F காட்டிலும் மேலானவை. இவைகளின் வேகம் மணிக்கு 670 கிலோ மீடர். அதிக சாமான்களையும் ஏற்றிச் செல்லமுடியும், இவைகளும் பிரிடிஷ் விமானுதிக்கத்திற்குக் காரணம்.

### சாம்ராஜ்யம் பூராவும் பயிற்சி கொடுக்கப்படுகிறது.

இதில் ஒரு விசேஷம். கேவலம் விமானங்களை மாத்திரம் அதிக சக்தியுள்ள வைகளாகச் செய்து கொண்டால் போதாது. விமானிகளுக்கும் அதிக சாமர்த்தி யம் வேண்டும். சாம்ராஜ்யம் பூராவும் பயிற்சியளிக்கப்பட்டு புதிய புதிய மாலுமி கள் பிரிடிஷ் விமானப்படையில் சேர்ந்துகொண்டு நூற்றுக்கணக்கான மணி நேரம் விமானங்களிலேயே சஞ்சரித்துப் பெயர் பெற்றிருக்கின்றனர். விமான யுத்த தந்திரங்களிலும் பயிற்சி பெற்றிருக்கின்றனர். ஒவ்வொரு விமான ஓட்டிக்கும் பள்ளிக்கூடத்தில் பாடம் கற்பிப்பதோடு விமான தளங்களிலும் யுத்தரங்கங்களி லும் பயிற்சியளிக்கப்படுகிறது. அந்த இடங்களில் ஏற்கனவே அனுபவம்பெற்ற மாலுமிகள் போதகாசிரியர்களாக இருப்பார்கள்

ஜெர்மனியில் இவ்விதம் கிடையாது. அங்கே முன் பழக்கம் இல்லாமலேயே சண்டைகளுக்கு அனுப்பப்படுகிறார்கள். பிரிடன்மேல் நடந்த விமானப்போரில் கற்ற பாடங்கள் ஒவ்வொரு பிரிடிஷ் மாலுமிக்கும் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அக்காலத்தில் நடந்த போரின் விவரங்கள் படங்கள் மூலம் காண்பிக்கப்படு கின்றன.

### இராக்காலத் தற்காப்பு.

முன் கொடுத்த விவரங்களெல்லாம் பிரிடன்பேரில் நடந்த பகல் காலச் சண்டையில் ஜெர்மன் லுப்ட்வாபி தோற்றதைத் தெரியப்படுத்துகின்றன. பகல்காலத் தாக்குதலில் முன்னேற முடியாமல் ஜெர்மன் விமானங்கள் இராக் காலத் தாக்குதலை ஆரம்பித்தன. பிரிடிஷ் பொதுமக்களின் தைரியத்தைக் கொலைக்கக் கடுமையாக நகரங்கள் தாக்கப்பட்டன. ஆனால் பிரிடிஷ்காரரின் ஊக்கம்தான் அதிகரித்தது. இராக்காலத் தாக்குதலை எதிர்த்தும் பிரிடிஷ் பாம்பர்கள் சண்டைசெய்து ஆதிக்கமடைந்தன.

இந்த வெற்றிக்குக் காரணமாக புதிய தந்திரங்கள் கையாளப்பட்டன. ரேடியோ இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்க உதவும் கருவிகளால் எதிரி பாம் பர்களின் வருகை கண்டுகொள்ளப்பட்டது. பிறகு ரேடியோ டெலிபோன் மூல மாக நமது பைடர் விமானங்களுக்கு எதிரி பாம்பர்களின் நிலை சொல்லப்பட்டு கடுமையான இரவுகளிலும் வெற்றிகரமாகச் சண்டை செய்யப்பட்டது.

இவ்விதம் இராக் காலங்களில் அடைந்த வெற்றியைக் கீழ்கண்ட கணக்கு களைக் கொண்டே தெரிந்துகொள்ளலாம். 1940-ம் ௵ ஸெப்டம்பர் மாதத்தில் கிரேட் பிரிடனில் 17,569 பேர் காயமடைந்தனர். அதில் 6,954 பேர் இறந்தனர். அதே மாதத்தில் 20 ஜெர்மன் இராக்கால பாம்பர்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. அதாவது காயமடைந்த 886 பேருக்கு ஒரு எதிரி விமானம் வீதம் தாக்கப் பட்டது. 1941 ஏப்ரலில் 12,988 பேர் இறந்தனர். இதில் 6,062 கொல்லப் பட்டனர். பாம்பர்களின் நஷ்டம் 87; அதாவது ஒரு விமானத்திற்கு 149 பேர் வீதமாகிறது. மே மாதத்தில் காயமடைந்த 10,575 பேரில் 5,394 பேர்தான்

இறந்தனர். ஆனால் 144 எதிரி இராக்கால பாம்பர்கள் சுட்டுத் தள்ளப்பட்டன. ஜூனின் மாதத்தில் காயமடைந்த 867-ல் 399 பேர் இறந்தனர். 42 ஜெர்மன் பாம்பர்கள் சுடப்பட்டன. அதாவது $20\frac{1}{2}$ பேருக்கு ஒரு பாம்பர் வீதமாகிறது. மொத்த விகிதத்தைப் பார்த்தால் 73 பேர் காயமடைந்ததற்கு ஒரு எதிரி பாம்பர் நஷ்டமாகியிருக்கிறது. ஒரு ஜெர்மன் மானுமி இறந்தோ, பிடிபட்டோ போனதற்கு 2 பிரிடிஷ் பொது மக்கள் இறந்திருக்கின்றனர்.

இந்த சந்தர்ப்பங்களிலெல்லாம் இராக்காலத் தாக்குதலுக்சென்று தனி பிரிடிஷ் விமானப் பகுதிகள் ஏற்படுத்தப்பட்டன. ஜெர்மனிக்கு அவ்வளவு இராக்கால விமானங்கள் கிடையாது. எதிரி நாட்டில் குண்டுபோடச்செல்லுவதனால் பிரிடிஷ் பாம்பர்கள் வெகுதூரம் பறக்கவேண்டும். கிரேட் பிரிடன் மேல் பாய்ந்த எதிரி விமானங்களின் கணக்கைப்போலவே பிரிடிஷ் விமானங்கள் எதிரி நாட்டில் தாக்கிவருகின்றன. அப்படியெல்லாம் இருந்தும் அதிகமான விமான நஷ்டம் 73 தான். அதுவும் மிகக் கடுமையான இரவுகளில் 2 மணி சுமாருக்கு, மேகங்கள் நிறைந்த இரவிலும் தாக்குதல் செய்ததால் ஏற்பட்டது.

பிரிஸ்டல் பியோபைடர்கள், டக்ளஸ் ஹாக்பைடர்கள் ஜெர்மன் Me 110, Ju 88, பைடர்களைக் காட்டிலும் எல்லா விதத்திலும் அதிக சக்திவாய்ந்தவை. ரேடியோ கண்டு பிடிக்கும் கருவிகளால் எதிரிகளின் விமான நடமாட்டத்தைக் கண்டுபிடித்து விடலாம். இனிமேல் இராக்காலங்களில் மேகங்கள் இங்கிலாந்தின் பேரில் மூடிக்கொள்ளுமாதலால் எதிரிகள் சுலபமாக வரமுடியாது. இது நமக்குச் சாதகமான அம்சம்.

### பிரிடிஷ் விமானப்படை ஆரம்பச் சண்டையைச் செய்கிறது.

1940-ம் வருஷம் கோடையிலும், சரத்காலத்திலும் பிரிடிஷ் விமானப் படைத் தற்காப்பிலேயே இருந்து வந்தது. பிரான்ஸை ஜெர்மனி பிடித்துக் கொண்டு அங்கு கடற்கரை ஓரமாயிருந்த தளங்களை வியாபித்துக்கொண்டதும் பிரிடனுக்கு பயம் அதிகரித்தது. இரவும் பகலும் பிரிடன்மேல் தாக்குதலும் செய்யப்பட்டது. சேதமும் அதிகம் ஏற்பட்டது. இருந்தாலும் பிரிடிஷ் விமானப்படை எதிர்த்துப்போராடி எதிரி விமானங்களைச் சிதறடித்து விமானிகளையும் கொன்றது.

அது முதல் பிரிடிஷ் விமானப்படைக்கு அதிக விமானங்களும், விமானிகளும் சேர்க்கப்பட்டது. ஜெர்மானியர் எதிர்பார்த்தபடி பிரிடிஷ் விமானத் தொழிற்சாலைகள் கெடவில்லை. முன்னைக்காட்டிலும் அதிகம் விருத்தியடைந்தன. அதிகமான விமானங்கள் கட்டி முடிக்கப்பட்டன. அமெரிக்கர்களின் உதவியும் வந்தது. உடனே தற்காப்புப் போர் முன்னேற்றப்போராக மாறிவிட்டது. பிரிடிஷ் விமானப்படை தனது ஆதிக்கத்தை நிலை நாட்டிக்கொண்டது. அது முதல் ஒரு தடையையும் லக்ஷியம் செய்யாது எதிரி நாட்டில் சென்று தாக்கி வருகின்றன.

1940-ம் வருஷ சரத்காலத்தில் ஜெர்மானியர் பகல் காலத்திலேயே பிரிடன் மேல் முன்னேற முடியவில்லை. ஆனால் பிரான்ஸிலுள்ள ஜெர்மன் தளங்களை பிரிடிஷ் விமானங்கள் வெற்றிகரமாகத்தாக்கி வருகின்றன. இதற்கு காரணங்களை நாம் ஏற்கனவேயே சொல்லியிருக்கிறோம். எண்ணிக்கைக் குறைவை பிரிடிஷ் விமானங்கள் பொருட்படுத்தவில்லை. பிரிடிஷ் விமானங்கள் சமமாகவோ அதிகமாகவோ இருக்கும் சந்தர்ப்பங்களில் ஜெர்மானியருக்கு அதிக நஷ்டம்தான். சில சந்தர்ப்பங்களில் பிரிடிஷ் விமானங்களுடன் எதிரிகள் சண்டைக்கே வராமலிருந்து விடுகின்றனர். ஆகவே இனிமேல் நாஸிகளுக்கு அதிக நஷ்டம்தான் ஏற்படும். ஏனென்றால் பிரிடிஷ் விமானங்களும் தந்திரங்களும் அதிகமாகிவருகின்றன.

### முன்னேற்றப் படை யெடுப்புகள்.

1941-ம் வருஷ கோடையில்தான் பிரிடிஷ் விமானப்படை முன்னேறித்தாக்க ஆரம்பித்தது. முதல் ஆறு மாதங்களில் பிரான்ஸின்பேரில் 40 பெரும் வகையான படையெடுப்புகள் செய்யப்பட்டன. ஜெர்மன் நிலயங்களில் நூற்றுக

கணக்கான டன் எடையுள்ள குண்டுகள் போடப்பட்டன. ஜூன் பின் பாதிக்குள் 195 ஜெர்மன் பைடர்கள், 112 பாம்பர்களும் சுட்டுத்தள்ளப்பட்டன. 88 பிரிடிஷ் பைடர்களும், 5 பாம்பர்களும் நஷ்டம்.

**சக்தி வாய்ந்த யந்திரங்கள்.**

கொஞ்சம் கொஞ்சமாக பகல்காலத் தாக்குதல்கள் அதிகமாகிக்கொண்டே போயின. பிளன்ஹீம் பாம்பர்கள் மாற்றிக் கட்டப்பட்டு, முன்பைவிட மூன்று மடங்கு குண்டுகள் அதிகமாக ஏற்றப்பட்டு ஜெர்மனியில் போய் குண்டுகளைப் போட்டன. இரவிலும் ஜெர்மனி தாக்கப்பட்டு வருகிறது. பல தடவைகளில் நூற்றுக்கணக்கான விமானங்கள் சென்று தாக்கின. எதிரிக்குள்ளதைக் காட்டிலும் பிரிடிஷ் விமானப்படையில் பெரிய பாம்பர்கள் இருக்கின்றன. ஸ்டார்லிங், ஹண்டிலி பேஜ், ஹலிபாக்ஸ், போயிங் கோட்டை, விபரேடர் முதலியவை பல டன் குண்டுகளை ஏற்றிக்கொண்டு பெர்லின் போய் திரும்பிவந்து விடும்.

உதாரணமாக போயிங் கோட்டையை Ju 88-வுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம். இது பழைய ரகம்தான். இருந்தாலும் Ju 88-ஐவிட மேலானது. போயிங்கின் வேகம் மணிக்கு 520 கிலோமீடர், Ju 88, 490 கிலோமீடர் வீதம் தான் செல்லும். போயிங்கில் 2,260 கிலோ கிராம் எடையுள்ள குண்டுகளை ஏற்றலாம். 3,200 கிலோமீடர் தூரம்போகலாம், 9,000 மீடர் உயரமும் போகும். Ju 88ல் 1,800 கிலோ கிராம் குண்டுகள் தான் ஏற்ற முடியும். 2,750 கிலோ மீடர் தூரம் போகும், 6,000 மீடர் உயரம்தான் பறக்க முடியும்.

போயிங் விமானம் பறக்கும் உயரத்தில் கீழிருந்து விமான எதிர்ப்பு பீரங்கிகள் சுட முடியாது. பைடர் விமானங்களும் தடுக்க முடியாது. பழைய விமானங்களானாலும் புதிய விமானங்களானாலும் ஜெர்மன் விமானங்களைக் காட்டிலும் மேலானவை. 5-வருஷ அனுபவத்தின்பேரில் இவை கட்டப்பட்டுள்ளன. வெல்லிங்டன் விமானம் 1,130 கிலோகிராம் குண்டுகளை ஏற்றிக்கொண்டு, 3,200 கிலோமீடர் போகும். ஆனால் He 111K ஹீங்கல் விமானம் 1,000 கிலோகிராம் குண்டுகளுடன் 1,850 கிலோமீடர்தான் போகும். பிரிடனின் பாதுகாப்புப் போர் விருத்தியாக ஆகத்தான் இவ்வம்சங்கள் சாதகமாகப் புலப்படும்.

**மத்தியக்கிழக்கு யுத்தம்.**

இவ்வித விவரங்களுக்கிடையில் மத்தியக்கிழக்கு சண்டையைப்பற்றியும், கடற்படைக்கு உதவிய விமானங்களைப்பற்றியும் நாம் அவசியம் பிரஸ்தாபிக்க வேண்டும். ஸ்பெயின் சண்டையில் வெற்றியடைந்ததற்காக அதிக கர்வத்துடன் திரியும் இதாலிய விமானங்களுக்கு இரண்டுபேர் உட்காரும் பைடர்களும், மூன்று இஞ்ஜினுள்ள பாம்பர்களும், பிரிடிஷ் விமானப்படையின் ஹரிகேன் பைடர்களுக்கு முன்னால் நிற்கமுடியவில்லை. பிளன்ஹீம், மேரிலாந்து பிரிடிஷ் பாம்பர்களுக்குச் சமமாகவும் ஆகவில்லை. ஜெர்மானியர் லிபியாவில் புகுந்ததும் இதாலிய விமானங்கள் கொஞ்சம் தலை நீட்டின. 1941-ம் வருஷம் ஜூன் மாதம் முடிவுவரை 1,084 இதாலிய, ஜெர்மன் விமானங்கள் மத்தியககிழக்கில் சுட்டுத் தள்ளப்பட்டன. 273 பிரிடிஷ் விமானங்களே நஷ்டம். தரையிலேயே 1,000 அச்சு நாட்டு விமானங்கள் அழிந்துபோயின.

**கடற்படைக்கு உதவும் விமானப்படை.**

மத்தியதரைக் கடலில் இப்படை வெகுவாக ஈடுபட்டிருந்தது. தினம் செய்யும் சண்டையைத் தவிர, வேவு பார்க்கும் வேலையிலும் ஈடுபட்டிருந்தது. டார்பிடோ விமானங்களைக்கொண்டே மூன்று பெறும் வெற்றிகள் அடையப்பட்டன. 1940-ம் வருஷம் நவம்பர் மாதம் 11உயில் டாரண்டோவில் 'விடோரியோ' வகையைச் சேர்ந்த பெரும் யுத்தக் கப்பலையும் 'கவோர்' வகையைச் சேர்ந்த இரண்டு யுத்தக் கப்பல்களையும், இரண்டு க்ரூயிஸர்களையும், இரண்டு தனிக் கப்பல்களையும் மூழ்கடித்தன. இவை யாவும் விமானப் புகைப்படமூலமாக ஊர்ஜிதம் செய்யப்பட்டன.

மார்ச்சு மாதம் 28உ மடபன்குடா சண்டையில் ஐந்து இதாலியச் சண்டைக் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. ஒரே பிரிடிஷ் விமானி நஷ்டம். "பிஸ்மார்க்" கப்பல் கண்டுபிடிக்கப்பட்டு தாக்கப்பட்டதும் கப்பற்படை விமானங்களால்தான்.

அடுத்தபடியாக லுப்ட்வாபி பெரிது என்ற வார்த்தையைப் போக்கடிக்க வேண்டும். ருஷ்யாவை ஜெர்மனி தாக்கப் போனபோது போதுமான பாம்பர்கள் இல்லாததால், ஜெர்மனி பிரான்ஸிலிருந்தும் பாம்பர்களை அழைத்துக்கொண்டது. பிறகு பிரிடிஷ் விமானப்படையின் தாக்குதல் ஆரம்பமானவுடன் அதைத் தடுக்க முடியாமல் ஜெர்மனி தத்தளித்தது.

### வெற்றி கைமாறிவிட்டது.

யுத்தத்தின் போக்கே 1940-ம் ௵ சரத்காலம் முதல் மாறிவிட்டது. இதற்குக்காரணம் பிரிடிஷ் விமானப்படையின் வளரும் பலம்தான். வெற்றியடைவதானல் எண்ணிக்கையும், தந்திரமும் அதிகம்வேண்டும். அமெரிக்காவின் உதவியால் பிரிடிஷ் விமானப்படை இரண்டிலும் பலம் அடைந்துவருகிறது. 1942-ம் ௵ வசந்தகாலத்திற்குள் பிரிடிஷ் விமானப்படையின் எண்ணிக்கை லுப்ட்வாபிக்கு சமமாகிவிடும். அது முதல் விமான ஆதிக்கம் பிரிடனுக்குத்தான். ஜெர்மனிமேபேரில் தாராளமாகப் படையெடுப்புகள் நேரும்.

இதுவரை இல்லாத புதியவிதமான விமானங்களும் கட்டப்பட்டுவருகின்றன. ஜெர்மனியில் He. 113, பாக்-உல்ப், Me. 109-Eகளைத் தவிர வேறுவிதமே கிடையாது. கட்டுவதற்கு வசதியும் இல்லை. புதிதாக ஏதோ Fw. 190, Do 217, He. 177 போன்ற விமானங்களைக் கட்டுவதாக பிரசாரம் மாத்திரம் செய்கிறார்கள். ஏது வந்தாலும் பிரிடிஷ் விமானங்கள் ஒரு கைபார்க்கும். ஏனென்றால் இந்த விமானங்களைப்பற்றி அதற்கு நன்றாகத் தெரியும்.

### புதியவிதமானவை.

புதியவிதமான டியூன், ஹாலிபாக்ஸ், மான்செஸ்டர், ஸ்டர்லிங், லைட்னிங், லிபரேடர், வென்ஜன்ஸ், பெர்முடா, கிட்டிஹாக், டார்னடோ போன்ற பிரிடிஷ் விமானங்களைக்கொண்டு விமானாதிக்கம் அடையப்படும். இவை யாவும் ஏராளமாகக் கட்டப்படுகின்றன.

### ஆங்கிலேய—அமெரிக்க உற்பத்தி.

பிரிடிஷ் விமானத் தொழிற்சாலைகளும், அமெரிக்க விமானத் தொழிற்சாலைகளும் ஒன்று சேர்ந்து ஹிட்லரை ஒழிக்கும் ஒரே எண்ணத்துடன் வேலை செய்து வருகின்றன. ஜெர்மானியர் என்ன தற்புகழ்ச்சி செய்தாலும் இவர்கள் பயப்படமாட்டார்கள். அடங்கிக்கிடக்கும் நாட்டினரும் நேச நாடுகளுடன் ஒன்று சேர்ந்து, அச்சுநாடுகளை ஒழித்து ஐரோப்பாவில் ஸ்வதந்திரத்தை ஸ்தாபிப்பார்கள்.

---

## வார யுத்தச் செய்திகள்.

---

### 6—6—42-லிருந்து 12—6—42-வரை.

**சீனு.**—மத்திய செகியாங்கிலுள்ள விமான தளங்களடங்கிய சுங்க்ஸீன் நகரத்தைக் கைப்பற்ற எதிரி இன்னும் சண்டை செய்கிறான். கியாங், கியாங்ஸி மாகாணங்கள் வழியாகச் செல்லும் இருப்புப்பாதையைக் கைப்பற்றிக்கொள்ள ஜப்பானியர்கள் தாக்கிவருகின்றனர். சீனர்கள் விடாமல் குறுக்கு எதிர்ப்பு செய்து பென்சாங் (Fenchang)குக்கு மேற்கேயுள்ள பான்டேவோ (Pantao) கியான்லிங்குக்கு மேற்கேயுள்ள ஸீனுமியோ (Hsiennumiao) நான்சாங்குக்கு மேற்கேயுள்ள உஷான்பு (Wushanpu) ஆகிய இவ்விடங்களை மீண்டும் கைப்பற்றிக்கொண்டனர். ஆனால் நான்சாங்குக்கு தென்கிழக்கேயுள்ள டுங்ஸியாங்கை இழந்துவிட்டார்கள்.

ஷான் ஸமஸ்தானங்களில் கெங்டங் (Kengtung) டிங்ஸங் (Tinsung) இவை இரண்டையும் ஜப்பானியர் கைப்பற்றியிருக்கின்றனர்.

பர்மாவுக்கு அனுப்பப்பட்ட சீன வெளிநாட்டுப்படை யூனுனுக்குள் பின் வாங்கியது. ஜப்பானியர் யுசிபோ, மெயிஸ்டி, யௌலான் என்ற இடங்களில் தடுக்கவும் பட்டனர். லிஷுபிங்குக்கும், சுசாங்குக்கும் இடையில் கடும் சண்டை நடக்கிறது.

சுஹ்ஸீனில் விஷப்புகையை ஜப்பானியர் உபயோகித்ததாகத் தெரிய வருகிறது. இவ்விதம் மீண்டும் செய்தால் ஜப்பானியர் பேரிலும் உபயோகப் படுத்தப்படும் என்று ஜனதிபதி ரூஸ்வெல்ட் எச்சரிக்கை செய்திருக்கிறார். தாங்கள் அவ்விதம் உபயோகிக்க வில்லையென்று ஜப்பானியர் சொல்லிவந்தாலும் பிடிபட்ட ஜப்பானியக் கைதிகளிடமிருந்து பிடுங்கப்பட்ட தஸ்தவேஜுகளின் மூலமாக விஷப்புகையை உபயோகப்படுத்துவதற்கு ஜப்பானிய அரசாங்கத் தாரே அனுமதித்திருப்பதாகத் தெரியவருகிறது. மேலும் எதிரி யுத்தரங்கத்தில் விட்டுப்போன வெடிக்காத குண்டுகளைப் பரிசோதனை செய்து அவைகளில் விஷப்புகை இருப்பதாகவே சீன வைத்தியர்களும் அயல்நாட்டு வைத்தியர்களும் தெரிவிக்கிறார்கள். கடுகுப்புகை கொண்ட 800 குண்டுகள் போடப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரிடிஷ்-அமெரிக்க விமானப் பகுதிகள் சீனவுக்கு வந்திருக்கின்றன.

**பஸிபிக் யுத்த நிலை**.—வடக்கே டச்சுத் துறைமுகத்தின் பேரிலும் கிழக்கே மிட்வே தீவுகளுக்கருகிலும், தெற்கே ஆஸ்திரேலிய துறைமுகமான ஸிட்னி பேரிலுமாக மூன்று தாக்குதலை ஜப்பானியர் செய்தனர்.

இதில் முதல் தாக்குதல் மூன்றும் தேதி நடந்தது. அலூஷியன் தீவுகளி லுள்ள டச்சுத் துறைமுகம் இருமுறை தாக்கப்பட்டது. ஜப்பானுக்கும் வட அமெரிக்காவுக்கும் இடையில் இது ஒரு முக்கிய தளம். இங்கு நடந்த தாக்குதலை டோகியோ பேரில் செய்யப்பட்ட அமெரிக்கத் தாக்குதலுக்குப் பதிலாகவும் வேவு பார்க்கும் சமயத்தில் செய்யப்பட்டதென்றும், பின்னடி நடக்கப்போகும் மிட்வே தீவு தாக்குதலிலிருந்து எதிரியின் கவனத்தை அப்புறப்படுத்துவதற்காக செய்யப்பட்ட தாக்குதலென்றும் பலவிதமாகச் சொல்லப்படுகிறது. அலூஷியன் தீவுகளில் சிலவற்றை எதிரி பிடித்திருப்பதாக அச்சுநாட்டு வதந்தி கூறுகிறது. இது ஊர்ஜிதமாகவில்லை. அமெரிக்கர் ஒருவர் இதைப்பற்றி சொல்லும்போது 'எதிரி ஒரு தீவையும் பிடிக்கவில்லை' என்றார்.

இரண்டாவது தாக்குதல் மிட்வே தீவுக்குப் பக்கத்தில் நடந்தது. இது டச்சுத் துறைமுகத்திலிருந்து 1,653 மைல்கள் அப்பாலுள்ளது. இங்கே ஜூன்மீ 4-ம்தேதி சண்டை ஆரம்பமாகி சில நாட்கள் நடந்தது. இத்தடவை 6-வது தாக்குதலாகும். ஆனல் மிகக் கடுமையானது. அமெரிக்கப் போக்குவரவைத் துண்டித்து இத்தீவில் இறங்குவதற்கென்றே ஜப்பானியரால் செய்யப்பட்டுள்ளது. ஆனல் இரண்டு மூன்று விமானம் தூக்கும் கப்பல்களும், அவைகளிலுள்ள விமானங்களும் நாசமாகி எதிரி பின்வாங்கினன். அத்துடன் எதிரியும் மற்றும் இரண்டு விமானமேற்றும் கப்பல்களுக்கும் மூன்று சண்டைக் கப்பல்களுக்கும், நான்கு க்ரூயிஸர்களுக்கும், மூன்று போக்குவரத்துக் கப்பல்களுக்கும் சேதம். இதை அமெரிக்கர்களுக்கு ஓர் பெரிய வெற்றி என்றே சொல்லவேண்டும். பேர்ல் துறைமுகத்தில் அடைந்த நஷ்டத்திற்கு எதிரி பேரில் ஓரளவு வஞ்சகமும் தீர்த்துக்கொள்ளப்பட்டது.

ஸிட்னி, நியூகாஸில் இவ்விரண்டு இடங்களிலும் எதிரி நீர்மூழ்கிகளைக் கொண்டு தாக்கினன். அதில் எதிரிக்குத்தான் 8 நீர்மூழ்கிகள் சேதம்.

**பர்மா**.—பிரிடிஷ் விமானப்படை அகியாப், ஆய்ஸ்டர்தீவு, ஹோமலின் இவைகளைத்தாக்கின. அமெரிக்க விமானப்பகுதி ரெங்கூனைத் தாக்கியது.

**இந்தியா**.—ஒரு பெரும் துணைக்கப்பல் கூட்டம் இந்தியாவுக்கு வந்து சேர்ந்தது. இதில் வந்த கப்பல்கள் அதிகமாக இருந்ததினல் இதிலுள்ள சாமானகளை ஒரே துறைமுகத்தில் இறக்க முடியவில்லை. ஸிலோனில் செய்யப்

பட்ட பாதுகாப்புகள் எதிரியின் தாக்குதலைத் தடுப்பதற்கும் முன்னேற்றப் போர் செய்வதற்கும் லாயக்காக இருக்கிறதென்று சொல்லப்படுகிறது. விமானப் படையெடுப்புக் காலங்களில் அவஸ்தைப்படுவோருக்குச் சிகிச்சை செய்வதற்காக பிரிடிஷ் குவேக்கர் கூட்டம் சீக்கிரத்தில் வந்துசேரும். யுத்த சாமான்களின் உற்பத்தி, போக்குவரவு, வரவு செலவு, சாமான்களுக்குச் சீட்டுக்கொடுப்பது முதலிய பிரச்னைகளில் ஒத்துழைப்பதற்காக இந்தியா கவர்ன்மெண்டின் மந்திரி சபையிலிருந்து யுத்த சாமான்கள் சம்பந்தமான கமிட்டி என்ற பெயருடன் நியமிக்கப்பட்டிருக்கறது. அக்கமிட்டியில் கப்பல்களைப் பழுதுபார்ப்பது, புதிதாகக்கட்டுவது முதலிய பிரச்னைகளைக் கவனிப்பதற்காக ஒரு டைரக்டர் ஜெனரல் நியமிக்கப்பட்டிருக்கிறார் 'யுத்தத்திற்குத் தேவையான பலசாமான்களை ஒரு வருஷத்திற்குள் இந்தியா தானாகவே உண்டுபண்ணிக்கொள்ளக்கூடும்' என்று அமெரிக்க டெகினிகல் சங்கத் தலைவரான டாக்டர் கிராடி அபிப்பிராயப் படுகிறார்.

சமீபத்தில் கிளாஸ்டர் கோமகன் இந்தியா வந்திருக்கிறார். இவர் ராணுவம் பொதுஜனப் பாதுகாப்பு முதலியவைகளைப் பார்வையிடுவார்.

**லிபியா.**—நைட்ஸ்பிரிட்ஜ், பிர்ஹகீம் இவைகளுக்குப் பக்கத்தில் கடும் யுத்தம் நடக்கிறது. டெவில்ஸ்கால்ட்ரன் (Devils Cauldron), ஹெட்ஜ்ஹாக் (Hedge-Hog) முதலிய இடங்களில் சண்டை நடக்கிறது. ஹர்மெட்டைப் பிரிடிஷ் படைகள் பிடித்திருக்கின்றன. நைட்ஸ்பிரிட்ஜிக்கருகில் மாத்திரம் அச்சுநாட்டுப் படைகள் 340 டாங்கிகளை இழந்திருக்கின்றன. பாஸ்ராவில் 20,000 அமெரிக்கத் துருப்புகள் வந்திறங்கியிருக்கின்றன.

**ருஷ்யா**—ஸெபாஸ்டபூலை ஐந்துமாத காலமாக வீணாக முற்றுகையிட்டு, தற்போதுதான் ஜெர்மானியர் விமான மூலம் தாக்கிவருகின்றனர். கெர்ச்சைத் தாண்டி ஜெர்மன துருப்புகள் டமானில் இறங்கியதாகவும், அனபாவைப் பிடித்ததாயும் சொல்லப்படுகிறது. கார்கவ்வில் புதிய ஜெர்மன் தாக்குதல்செய்யப் பட்டிருக்கிறது.

பால்டிக் கடலில் 10 ஜெர்மன் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன.

ஹங்கேரியின் துரோக மந்திரியான கல்லே என்பவனுக்கு ஹிட்லர் பேட்டியளித்தான். பின்லாந்து போர் தலைவரான மானர்ஹீமை சந்தித்து அவனது 75-வது பிறந்த நாள் என்று வாழ்த்து செய்தான். உண்மையில் ருஷ்யப் போர் முனையில் பின்லாந்து அதிகம் ஈடுபடவேண்டுமென்பது ஹிட்லர் நோக்கம். பெர்லினிக்கும் சென்று ஐரோப்பாவின் காலையாளியான ஹீட்ரிச்சின் சவத்திற்கு மரியாதை செய்தான்.

**பிரிடிஷ் விமானப்படை.**—தாக்குதல்கள் எதிரிப்பிரதேசத்தில் ஓயாமல் நடந்தேறின. ப்ரெமன், லீல, ட்ரிபோர்ட், செர்பர்க், ஹாவேர். ஆஸ்டெண்ட், டியப், ரூர் முதலிய இடங்கள் தாக்கப்பட்டன.

ஸிரகூஸ் சர்வ கலாசாலையில் ஜூன் மாதம் 8-ம் தேதி ஒரு கூட்டத்தின் முன்பாக லார்டு ஹாலிபாக்ஸ் பேசும்போது பின்வருமாறு சொன்னார். 'ஹிட்லர் ஹிரோயிடோ முதலிய நாஸிக்கூட்டத்தை ஒழிப்பதற்கான ஏற்பாட்டில் லூபெக், ராஸ்டாக், கோலோன், எஸ்ஸன் டோகியோ முதலியவைகள் தாக்கப்பட்டது ஆரம்ப கட்டமாகும். உங்களுடைய விமானப்படையும் எங்களுடன் சேர்ந்து கொண்டவுடன் ஜெர்மனியின் பேரில் கடும் வகையான தாக்குதல் செய்யப்படும்.

'ஜெர்மனியின் விமானத் தொழிற்சாலை இனி விருத்தியடைய முடியாது. அதன் உச்ச நிலை அடையப்பட்டது. இங்கிலாந்திற்கும் ஜெர்மனிக்கும் விமான பலம் சமமாக இருக்கிறது. ஜப்பானில் ஒரு வருஷத்தில் தயாராகும் சாமான்களை அமெரிக்காவில் ஒரு மாதத்தில் செய்யப்படுகின்றன. நமது பலம் தினம் அபிவிருத்தியடைந்து வருகிறது.'

அதே தினத்தில் பிரிடிஷ் விமானப்படை பிரெஞ்சு மக்களுக்குப் பிரெஞ்சு பாஷையில் பின்கண்ட் எச்சரிக்கையை அனுப்பியிருக்கிறது.

"பிரிடிஷ் விமானப் படையெடுப்புகள் இனிமேல் மிகக்கடுமையாகச் செய்யப்படுமாதலால் ஆக்கிரமித்த பிரான்ஸின் கடற்கரையோரமாக வசிப்பவர்களுக்கு பிரெஞ்சு பாஷையில் மீண்டும் எச்சரிக்கை கொடுப்பதென தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

"இப்பிராந்தியங்களில் பல மனிதர்கள் ஆபத்தான இடங்களில் வசிக்கிருர்கள். ஏற்கனவேயே எவ்வளவோ பேர்கள் இறந்துமிருக்கின்றனர். தங்கள் வீடுகளை விட்டுவிட்டு குடும்பங்களைப் பத்திரமான இடங்களுக்குக் கொண்டு போவதுதான் நல்லது. இது ஒரு சிரமமான காரியம்தான்.

"இவ்வித எச்சரிக்கை லண்டனிலிருந்து சொல்லப்படுகிறது. பிரெஞ்சு பொதுமக்கள் முடிந்த சமயங்களில் யுத்தரங்கங்களை விட்டுவிட்டு செல்வது நலம்.

"இனிமேல் பெல்ஜியம் எல்லையிலிருந்து பிரனீஸ் வரையில் கடுமையான யுத்தம் நேரலாம்.

"ஆனல் எப்பொழுது படையெடுப்பு நேரிடுமென்பதைப்பற்றி முன்னுடியே சொல்லமுடியாது. சரியான சந்தர்ப்பத்திலும் சாதகம் ஏற்படுமென்று தோன்றினுலும் படையெடுப்பு செய்யப்படும்.

"அவ்விதம் படையெடுப்பு நேரும் காலத்தில் பொதுமக்களுக்குத்தான் ஆபத்து ஏற்படும். சடற்கரையோரத்திலுள்ள எல்லாப் பிரெஞ்சு மக்களுக்கும் இவ்வெச்சரிக்கை கொடுக்கப்படுகிறது. ஜெர்மானியர் ஆக்கிரமிப்பிலுள்ள எல்லா பட்டணங்களிலிருந்தும் வெளியேறுவதுதான சரி.

"நாங்கள் தற்சமயமே உங்களை வெளியேறச் செய்வதற்குக் காரணமென்னவென்ருல் பிரான்ஸின் விடுதலைக்காகச் செய்யப்படும் சண்டை வெற்றிகரமாக முடியவேண்டும்.

"படையெடுப்பு நேரும்வரை காத்திருக்கவேண்டாம். அந்த சமயத்தில் உங்களால் வெளியேற முடியாது. கூடிய சீக்கிரத்திலேயே அவ்விடத்தை விட்டுச்சென்று விடுங்கள்."

**ஆங்கிலேய அமெரிக்க உற்பத்தி கமிட்டி** ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. சாமான்களின் உற்பத்தி சம்பந்தமான திட்டங்கள் இனி துவக்கப்படும். விளைவு பொருள்கள் உற்பத்தி சம்பந்தமாயும், உணவுப் பொருள்கள் உற்பத்தி சம்பந்தமாயும் இரண்டு போர்டுகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன.

**இதாலிய வருஷக் கொண்டாட்டம்.**—ஜூன் மீ 10-ம் தேதி முஸோலினி யுத்தத்தை ஆரம்பித்த இரண்டாவது வருஷக் கொண்டாட்டம் நடத்தப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் இதாலிக்கு தற்போது ஏற்பட்டுள்ள பரிதாபகரமான நிலையைப் பரிசீலனை செய்வது பொருத்தமாகும். டெய்லி டெலிகிராப்பில் அதைப்பற்றி கொடுத்துளள வர்ணனையைக் கீழே காணலாம் :—

'முஸோலினி ஒருவித செலவுமில்லாமல் கொள்ளையடிக்கலாமென்று யுத்தத்தில் ஈடுபட்டான். ஆனல் நாளதுவரை பிரான்ஸிடமிருந்தோ, பிரிட்னிடமிருந்தோ ஒன்றையுமடையவில்லை.'

யூகோஸ்லோவியாவில் பொம்மை அரசாங்கம் ஸ்தாபிக்கப்படுவதாயும் பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆனல் இதாலிய பொம்மை அரசாங்கத்தார் அங்கு அரசாள முடியவில்லை. கிரீஸ் சம்பந்தமாக முஸோலினி அடைந்த அனுபவம் ஒன்றே போதுமானது.

கிழக்கு ஆபிரிக்காவிலுள்ள இதாலிய சாம்ராஜ்யம் தொலைந்தது. லிபியாவைக் காப்பாற்றுவதற்காகவே ஜெர்மானியர் உதவி செய்துவருகின்றனர். ஜெர்மன் அதிகாரிகளும், துருபபுகளும் அப்பிரதேசத்தை ஆக்கிரமித்திருக்கின்றனர்.

இதாலியருக்கு வருஷம் பூராவாக உணவு கிடைக்கவில்லை. மாரிகாலத்தில் உடுக்க உடை கிடைக்கவில்லை.

யுத்தத்தின் முதல் வருஷத்தில் 37,000 இதாலியர்கள் இறந்தும் காயமும் பட்டனர். இரண்டாவது வருஷத்தில் இன்னும் ஆயிரக்கணக்கான இதாலியர் இறந்தனர். ஜெர்மானியர் அட்டையைப்போல் இதாலியரின் இரத்தத்தை உறிஞ்சி ருஷ்யப் போர்முனையில் ஈடுபடும்படி செய்கின்றனர்.

இதாலிக்கும் மற்ற ஆக்கிரமித்த நாடுகளுக்குமுள்ள வித்தியாசம் என்னவென்றால் ஜெர்மனியின் க்ஷேமத்தை முன்னிட்டு இதாலி அவஸ்தைப் படவேண்டியிருக்கிறது. சிறிது காலத்திற்குள் முஸோலினியைப்போல் வேறு எந்த அரசனும் இதாலிக்குத் துன்பத்தை விளைவிக்கவில்லை.

இந்தக் கஷ்டத்தில் ஜெர்மனி தோற்றால்தான் தமக்கு நன்மை கிடைக்குமென்று இதாலியர் நம்பியிருக்கின்றனர். அமெரிக்காவிலுள்ள இதாலியர்கள் கரிபால்டி என்பவனின் உணர்ச்சியுடன் உண்மையாகவே கொடுங்கோலை எதிர்த்து சண்டை செய்கின்றனர் இதாலியிலுள்ள இதாலியரும் அவ்விதம் சண்டை செய்வார்கள்.

**பிரிடன்.**—பலமுள்ள யுத்தக் கப்பல்களும், நாசகாரிகளும், மற்ற கப்பல்களும் பிரிடிஷ் கப்பல் படையில் சேர்ந்துள்ளன. இதை மாக்ஷிமை தங்கிய சக்கிரவர்த்தியவர்கள் மூன்றுநாள் பார்வையிட்டார்.

---

## சத்துருவினுடையவும், சத்துருவினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் நாடுகளில், பிரிடிஷ், நேசதேசங்களின் விமானங்களால் ஏற்பட்ட எதிர்ப்புகள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **1—6—42.** (திங்கட்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—நாலுதரம் விமான எதிர்ப்புகள்—ஆக்கிரமித்த வட பிரான்ஸ் (France), பெல்ஜியம் (Belgium). | 1 விமானி பத்திரமாய் தப்பிவிட்டார். | 9 விமானங்கள். | 2 விமானங்கள். |
| | கப்பல்துறைகள்.—ப்ருஜெஸ் (Bruges). | | | |
| | இரவில்.—ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்—ரூர் (Ruhr), பிரதேசத்தில். | | | |
| | எஸ்ஸன் (Essen) (1,036 பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதி விமான நிலயங்கள்.—ஜெர்மனி (Germany) ஆக்கிரமித்த பிரான்ஸ் (France), ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | | 35 விமானங்கள். | 2 விமானங்கள். |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **1—6—42.** (திங்கட்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | மோட்டார் லாரிகள், வெடிமருந்துஏற்றிச் செல்லும் வண்டிகள், கவசம்பூண்ட மோட்டார்கார்கள், டாங்கிகள்.—*யுத்தப் பிரதேசத்தில்.* | | | |
| | விமானமிறங்குமிடம்.-*டெர்ணு* (Derna). | | | |
| | விமான எதிர்ப்புகள்.—*முன்னணிப் பிரதேசங்களில்.* | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—*யுத்தரங்கம் முழுவதிலும்.* | | | |
| | **தூரக்கிழக்கு–டிமோர் (Timor Dutch)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | சைனிய வாஸஸ்தலங்கள், போக்குவரத்துகள்.—*ஆடம் போயா* (Atam boea). | | | |
| | **தூரக்கிழக்கு–நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம்.—*ராபால்* (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு–ஸாலமன் (Solomon) தீவுகள்**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கட்டடங்.—கள்.—*துளகி* (Tulagi). | | | |
| **2—6—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—விமான எதிர்ப்புகள், *இங்கிலீஷ் கால்வாய்* (English Channel), *வட பிரான்ஸ்* (France), *கிராவெலீன்ஸ்* (Gravelines) *பிரதேசம்.* | | | |
| | ரயில்வே லக்ஷியங்கள்.-*வட பிரான்ஸ்* (France), *பாஸ்டி-கலே* (Pas-de-Calais)*பிரதேசம்.* | 1 விமானி தப்பினர். | 9 விமானங்கள். | 3 விமானங்கள். |
| | கப்பல் துறைகள்.—*டியப்* (Dieppe), வெடிகண்ணிகள் அறிக்கும் 2 கப்பல்கள்.-*உஷான்ட்* (Ushant)*டுக் கருகாமையில்.* | | | |
| | இரவில் ராணுவ லக்ஷியங்கள், தொழிற்சாலைகள்.—*எஸ்ஸன்* (Essen) *உள்பட ரூர்* (Ruhr) *பிரதேசத்தில்.* | | | |
| | கப்பல்துறைகள்.—*டியப்* (Dieppe). | | | |
| | வெடிகண்ணிகள் போடுவது.-*விரோதி சமுத்திரங்களில்.* | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**2—6—42.** (செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.

விமான தளங்கள், இருப்புப்பாதைகள், தொழிற்சாலைகள்.—ஆக்கிரமித்த பிரதேசத்தில்.

**லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்).

**விரோதிக்குச் சொந்தமான யந்திரப் படைகள்.**—பர்ஹாஹீமு (Birhakheim க்கு வடக்கே.

**விமான எதிர்ப்புகள்.**-ஸிரெனைகா (Cyrenaica)வின் முன்னணிப் பிரதேசஙகளில்.

**ஸார்டீனியா (Sardinia)**—(பிரிடிஷ் விமானங்களால்).

லக்ஷியங்கள்.—பாண்டிலேரியா (Pantellaria), காக்லியேரி (Cagliari).

**ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்).

**விமானச் சண்டைகள், தரையிலுள்ள** விமானங்கள்.—போர்முனை முழுவதிலும்.

**தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.)

ஆய்ஸ்டர் (Oyster)தீவு.—ஆக்கியாபு (Akyab)க் கருகாமையில்.

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

வேவு பார்த்தல்.—லே (Lae).

**3—6—42.** (புதன்கிழமை).

**ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்).

பகலில்.—இருப்புப்பாதை—லெட்ரி போர்ட் (Le Treport).

கப்பல் துறைகள்.—செர்பர்க் (Cherbourg),லெஹாவர் (Lehavre).

விமான எதிர்ப்புகள்.—வடபிரான்ஸ் (France).

இரவில்.—தொழிற்சாலைகள்-ப்ரெமன் (Bremen).

கப்பல் துறைகள்.—டியப் (Dieppe).

**வேடிகண்ணிகள் போடுவது.**—விரோதி சமுத்திரங்களில்.

**விமான நிலயங்கள்.**—பிரான்ஸ் (France), ஹாலந்து, பெல்ஜியம் (Lowcountries).

10 விமானங்கள்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **3—6—42.** (புதன்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான உதவி.**—பிரிடிஷ் தரைப்படைகள். | | | |
| | **விமான எதிர்ப்புகள்**—விரோதி சைனியங்களுக்குப் பின்னுல். | | | |
| | **விமானமிறங்குமிடங்கள்.**—டெர்ணு (Derna), டிமிமி (Tmimi). | | | |
| | **யந்திரப்படைகள்.**—பர்ஹாக்கீம் (Bir-hakheim) பிரதேசத்தில். | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | **விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.**—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—டிமோர் (Timor)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **விமான நிலயம்.**—கோயபாங் (Koe-pang). | தீக்கள் கிளம்பின. | | |
| | **தூரக்கிழக்கு-நியூ பிரிடன் (New Britain)**-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **ராணுவ முகாம், கப்பல் துறைகள்.**—ரபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு—ஸாலமன் (Solomon) தீவுகள்**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **கடல் விமானம்.**—துளகி (Tulagi). | | | |
| **4—6—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்—**விமான நிலயம்.**—செர்பர்க் (Cherbourg) பிரதேசம். | அநேக எதிரி விமானங்கள் சேதமாயின. | | 1 விமானம். |
| | **விமான எதிர்ப்புகள்.**—வட பிரான்ஸ் (France). | | | |
| | **கப்பல் துறைகள்.**—பொலாயின் (Boulogne). | | | |
| | இரவில்—**கப்பல் துறைகள்.**—டியப் (Dieppe). | | | |
| | **விமான தளங்கள்.**—ஆக்கிரமித்த வட பிரான்ஸ் (France), ஹாலந்து (Holland). | | | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | **தரைப் படைகளுக்கு உதவும் விமானங்கள்.**—ஸிரெனைகா (Cyrenaica) வில். | | | |
| | **விரோதிக்குச் சொந்தமான மோட்டார் வண்டிகள், டாங்கிகள், வெடிமருந்து ஏற்றிச்செல்லும் வண்டிகள்.** | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படை யெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங் களின் நஷ்டம். |
|---|---|---|---|---|

**4—6—42.** (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.

லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).

துறைமுகம்.—பெங்காஸி (Benghazi).

மத்தியதரைக்கடல் (Mediterranean)—(பிரிடிஷ் விமானங்களால்).

ஒரு பெரிய விரோதிக் கப்பல்.—மத்திய தரைக்கடலின் மத்தியபாகத்தில்.

ஸிஸிலி (Sicily)—(பிரிடிஷ் விமானங்களால்).

கடேனியா (Catania).

ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).

விமானச் சண்டைகள், விமான நிலயங்களிலுள்ள விமானங்கள்.—போர் முனை முழுவதிலும்.

தூரக்கிழக்கு—நியூ பிரிடன்(New Britain)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்.)

துறைமுகம் கப்பல் துறைகள்.—ராபால் (Rabaul).

தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)-(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்).

வேவு பார்த்தல்.—விரோதி ஆக்கிரமித்த லே (Lae), ஸலாமாவா (Salamaua).

**5—6—42.** (வெள்ளிக்கிழமை).

ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—(பிரிடிஷ் விமானங்களால்).

பகலில்—மின்சார உற்பத்தி சாலைகள்.-ஆஸ்டெண்டு (Ostend), லெஹாவர் (Lehavre).

விமான நிலயங்கள்.-பிரிட்டானி (Brittany), அபிவில்லி (Abbeville), மோர்லே (Morlai), லானியன் (Lannion).

விமான எதிர்ப்புகள்.—கலே—டங்கர்க் (Calais—Dunkirk) பிரதேசத்தில்.

இரவில்.-வெடிகண்ணிகள் போடுவது. விரோதி சமுத்திரங்களில்.

லிபியா (Libya)—(பிரிடிஷ் விமானங்களால்).

விமானமிறங்குமிடங்கள்.—டெர்ணா (Derna), மார்டுபா (Martuba).

தரைச்சண்டைக்கு விமானங்களின் உதவி.-நைட்ஸ் பிரிட்ஜ் (Knight's Bridge)க்கு மேற்கில்.

ருஷ்யா (Russia)—(ருஷ்ய விமானங்களால்).

விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.-போர்முனை முழுவதிலும்.

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **5—6—42.** (வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி. | | | | |
| | **தூரக்கிழக்கு–நியூ பிரிடன் (New Britain)**–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமான நிலயம், துறைமுகம்.—ராபால் (Rabaul). | | | |
| | **தூரக்கிழக்கு—மிட்வே (Midway) தீவுகள்**–(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியக் கப்பற்படை.—மிட்வே (Midway) தீவுகளைத் தாக்கிற்று. | 3 ஜப்பானிய விமானங்களை ஏற்றிச்செல்லும் கப்பல்கள் மூழ்கடிக்கப்பட்டன. 4 க்ரூயிஸர்கள், 3 துருப்பு ஏறும் கப்பல்கள் சேதமாயின. | | |
| **6—6—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | பகலில்.—ரோந்து—இங்கிலீஷ் கால்வாயி (English Channel)ல். | | | |
| | இரவில்.-கப்பல் துறைகள், கப்பற்படை தளம்.—எம்டன் (Emden). | | | |
| | விரோதி விமான தளங்கள்.–ஹாலந்து, பெல்ஜியம் (Low countries). | | 9 விமானங்கள். | |
| | **லிபியா (Libya)**—(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விமானமிறங்குமிடங்கள், தரையிலுள்ள விமானங்கள்.—டெர்ணு (Derna), மார்டுபோ (Martuba). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கவசம் பூண்ட வண்டிகளும், ஸப்ளை வண்டிகளும்.—ஸிரேனைகா (Cyrenaica) யுத்தரங்கம் முழுவதிலும். | ஏராளமான வண்டிகள் சேதமாக்கப்பட்டன. | | |
| | துறைமுகம்.—பெங்காஸி (Benghazi). | | | |
| | **இதாலி (Italy)**—(பிரிடிஷ் விமானங்களால்.) | | | |
| | துறைமுகம், கப்பல்கள்—நேபிள்ஸ் (Naples). | | | |
| | **ருஷ்யா (Russia)**—(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | தரையிலுள்ள விமானங்கள், விமானச் சண்டைகள்—போர்முனை முழுவதிலும். | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)**—(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | ஜப்பானியத் துருப்புகளின் சேகரம்—சின்ட்வின் (Chindwin) நதிக்குக் கிழக்கேயுள்ள ஹோமலின் (Homalin) பிரதேசம். | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானப் படையெடுப்புகளால் ஏற்பட்ட நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். | விரோதி விமானங்களின் நஷ்டம். |
|---|---|---|---|---|
| **7—6—42.** (ஞாயிற்றுக்கிழமை). | | | | |
| | **ஜெர்மனியும், ஜெர்மனி ஆக்கிரமித்த ஐரோப்பாவும்—**(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதி விமான நிலயங்கள் இன்னும் மற்ற லக்ஷியங்கள் *ஹாலந்து* (Holland), *வடபிரான்ஸ்* (France). | | | |
| | விரோதிக்குச் சொந்தமான கப்பல்கள்— *பிரிஸியன்* (Frisian) *தீவுகளுக்கருகாமையில்.* | 1 கப்பல் தாக்குண்டது. | நஷ்டமில்லை. | |
| | **லிபியா (Libya)—**(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | விரோதித் துருப்புகளின் கூட்டம், ஸப்ளை வண்டிகள்—*யுத்தப் பிரதேசத்தில்.* | | | |
| | துறைமுகம்.—*பெங்காஸி* (Benghazi). | | | |
| | **ஸார்டினியா (Sardinia)—**(பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | கடல் விமானதளம்—*காக்ளியாரி* (Cagliari). | | | |
| | **ருஷ்யா (Russia)—**(ருஷ்ய விமானங்களால்). | | | |
| | விமானச் சண்டைகள், தரையிலுள்ள விமானங்கள்.—*போர்முனை எங்கும்.* | | | |
| | **தூரக்கிழக்கு—பர்மா (Burma)—**(அமெரிக்க, பிரிடிஷ் விமானங்களால்). | | | |
| | துறைமுகம், கப்பல்கள்—*அக்யாப்* (Akyab). | ஒரு வியாபாரக் கப்பல் சேதமாயிற்று; ஒரு அலைதாங்கி சேதமாக்கப் பட்டது. | | |

## விரோதிகளின் விமானப் படையெடுப்புகளின் விவரங்கள்

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ் நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **2—6—42.** (செவ்வாய்க்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)—**(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)—**(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | அநேக விமானங்கள் சேதமாயின. | 1 விமானம். | |
| | **தூரக்கிழக்கு (Far East)—**(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|
| **3—6—42.** (புதன்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்.) | | | |
| | இரவில்.—தென்கிழக்கு இங்கிலாந்து (England). | | 1 விமானம். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | **தூரக்கிழக்கு—அலாஸ்கா (Alaska)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | டச்சுத் துறைமுகம்.—அலூஷியன் (Aleutian) தீவுகள். | | | |
| **4—6—42.** (வியாழக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—ஒரு இடம் கிழக்கு ஆங்கிலியா (Anglia). | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | வேவுபார்த்தல்—மோர்ஸ்பி (Moresby) துறைமுகம். | | | |
| **5—6—42.** (வெள்ளிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—விரோதி விமான நடமாட்டமேயில்லை. | | | |
| | **லிபியா (Libya)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | பிரிடிஷ் ஸ்தானங்கள்.—பர்ஹாகிம் (Birhakheim) பிரதேசம். | | | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை. | | | |
| **6—6—42.** (சனிக்கிழமை). | | | | |
| | **பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | இரவில்.—அங்குமிங்கும் சில இடங்கள்—தென்கிழக்கு இங்கிலாந்தி (England)ல். | சொற்பச் சேதம். | 3 விமானங்கள். | |
| | **மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்). | | | |
| | மால்டா (Malta). | | 4 விமானங்கள். | |
| | **தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்). | | | |
| | வேவு பார்த்தல்.-ஆஸ்திரேலியா (Australia) வட கரையில், | | | |

| தேதி. | லக்ஷியங்கள். | விமானங்களிலிருந்து குண்டுகள் போடுவதினால் ஏற்படும் சேதம். | விரோதி விமான நஷ்டம். | பிரிடிஷ், நேசதேச விமான நஷ்டம். |
|---|---|---|---|---|

**7—6—42.** (ஞாயிற்றுக்கிழமை).

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

இரவில்.—ஒரு இடம் தென்மேற்கு இங்கிலாந்தி(England)ல்.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்).

மால்டா (Malta).

**தூரக்கிழக்கு (Far East)**—(ஜப்பானிய விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**8—6—42.** (திங்கட்கிழமை.)

**பிரிடன் (Britain)**—(ஜெர்மன் விமானங்களால்).

தகவல் ஒன்றும் கிடைக்கவில்லை.

**மத்தியதரைக்கடல் (Mediterranean)**—(ஜெர்மன் விமானங்களால்)

மால்டா (Malta).

**தூரக்கிழக்கு—நியூ கினி (New Guinea)**—(ஜப்பானிய விமானங்களால்).

| | | | | |
|---|---|---|---|---|
| | லே (Lae). | | | 2 விமானங்கள். |

**சீனு (China)**—(ஜப்பானிய விமானங்களால்).

சீன நகரங்கள்.—சிகியாங் (Chekiang) மாகாணத்தில்.

---

# யுத்தக் குறிப்புகள்.

---

**தேசீய யுத்த முன்னணி.** இம் முன்னணியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள விஷயங்களில் உணவுப் பொருள்களை அதிகம் உற்பத்தி செய்வதும் முக்கியமாக கவனிக்கப்பட்டு வருகிறது. பர்மா, ஸயாம், இந்தோ-சைனு முதலிய இடங்களிலிருந்து இந்தியாவிற்கு வந்து கொண்டிருந்த 13,00,000 டன் அரிசி தற்சமயம் வரவில்லை. ஸிலோனுக்கு இந்தியாவிலிருந்து தான் அரிசி போகவேண்டியிருக்கிறது. இந்தியாவிலுள்ள சைனியத்திற்கு உணவு அளிக்கப்படவேண்டும். மத்தியக்கிழக்கு, சமீபக் கிழக்கு நாடுகளிலும் பெர்ஸியாவிலும் பஞ்சம் ஏற்பட்டிருப்பதால் அங்கும் அரிசி அனுப்பப்பட வேண்டும். மேலும் மழைத்தட்டு முதலிய தொந்தரவுகளையும் ஈடுசெய்ய வேண்டும். போக்குவரவு சிரமமிருக்கிறது. எதிரித் தாக்குதல் நேர்ந்தால் எல்லாம் தடைபடும். ஆக இவ்வித சந்தர்பங்களில் உணவுப் பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்யச் சொல்லுவது பொருத்தமாகும். குடியானவர்கள் இனி சோம்பல் பிடித்துத் திரியக்கூடாது. பருத்தி, கடலை முதலியவைகளை உற்பத்தி செய்தால் அயல் நாடுகளுக்கு அவைகளை அனுப்ப முடியாததால் உணவுப் பொருள்களை அந்தந்த இடங்களில் சாகுபடி செய்யலாம். 70,00,000 ஏக்கரா நிலம் அதிகமாக சாகுபடி செய்யப்படவேண்டும். இதற்காக அரசாங்கத்தார் போதிய வசதிகள் கொடுக்கின்றனர். மேமீ 25உ இந்தியா கவர்ன்

மெண்டார் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் பின்கண்டபடி சொல்லியிருக்கின்றனர் அதாவது உணவுப் பொருள்களை அதிகமாக உற்பத்தி செய்து அவைகள் மிஞ்சிப் போனாலும் விலையாகாமல் போனாலும் கவர்ன்மெண்டாரே வாங்கிக் கொள்ளுவார்கள். அதனால் விலைவாசிகள் குறையாமல் செய்யப்படும்.

வி வி வி வி வி வி வி

**இந்தியப் பாதுகாப்பு.** ஒரு பெரிய துணைக்கப்பல் கூட்டம் இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு இந்தியாவிற்கு வந்து சேர்ந்துவிட்டது. ஒரு கப்பலாவது, பீரங்கியாவது, மனிதனாவது நஷ்டமாகவில்லை. இதில் வந்த சாமான்கள் ஏராளமாக இருந்ததால் ஒரே துறைமுகத்தில் இறக்கமுடியவில்லை ஆகவே பல துறைமுகங்களில் இறக்கப்பட்டன. பிரிடிஷ் சைனியத்திலிருந்து, காலாட் படை, பீரங்கிப்படை யந்திரப் படை, துருப்புகள், முதல் தரமான பிரிடிஷ் விமான மாலுமிகள் அமெரிக்க விமானிகள் ஆயிரக்கணக்காக வந்திருக்கின்றனர். இதைத் தவிர விமானங்களும், டாங்கிகளும், எதிரி டாங்கிகளைத் தாக்கும் பீரங்கிகளும், மோட்டார்களும். இதர தளவாடங்களும் எல்லாம் இறக்கப்பட்டன.

ஸிலோன் பத்திரமாகப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது. போதுமான யந்திரங்களும், இஞ்ஜினீயர்களும் விருத்தி செய்யப்பட்டுள்ளனர். ஹரிகேன் பைடர் விமானங்களும், வெகுதூரம் பறக்கும் படகுகளும வந்திருக்கின்றன. அமெரிக்காவில் கட்டப்பட்ட கடலினுல் பறக்கும் படகுகள் தங்கிய ஒரு பகுதியே வந்திருக்கிறது. இதைக் கனடா தேசத்தினர் ஓட்டுகின்றனர். ஆகவே கடல் மூலமாயும் ஆகாய மூலமாயும் ஸிலோனைத் தாக்கவரும் எதிரியைத் தடுக்க முடியும்.

இந்தியாவில் சாமான்களின் உற்பத்தி போக்குவரவு, முதலியவைகளைச் சரிவர நடத்த ஒரு யுத்த கால மந்திரி சபை ஏற்படுத்தப்படவேண்டுமென்று அமெரிக்க டெக்னிகல் கோஷ்டியார் சிபார்சு செய்திருக்கின்றனர்.

வி வி வி வி வி வி வி

**சைனாவில் நிலைமை.** தற்போதய சண்டையைக் கவனித்தால் ஜப்பானியர், கியாங்ஸிலுள்ள நான்சாங்கிலிருந்தும், குவாண்டனிலுள்ள காண்டனிலிருந்தும் பின்ஸர் படையெடுப்பு செய்வார்கள் போலிருக்கிறது.

சமீபத்தில் சைனாவிற்கும் பிரிடனுக்கு மனஸ்தாபம் ஏற்பட்டிருப்பதாயும் சீனர்களின் எதிர்ப்பு குறைந்துவருவதாயும் அச்சுநாடுகள் விசித்திரமாகக் கட்டிவிடுகின்றனர். இவை இரண்டும் ஆதாரமற்றவை என்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. மே ௴ 29௳ ஜெனரல் வேவல் சொல்லும்போது பர்மா யுத்தத்தில் ஜெனரல் ஸ்டில்வெல்லுக்கும், ஜெனரல் அலெக்ஸாண்டருக்கும் அதிக ஒற்றுமையிருந்ததாக அறிவித்தார். ஜூன் ௴ 3௳ காமன்ஸ் சபையில் மிஸ்ட்டர் ஈடன், சைனாவிற்கு நேசநாடுகளின் உதவி தாராளமாகவே இருக்கிறதென்று சொன்னார். மற்ற இடங்களில் ஏற்படக்கூடிய தேவையும் கவனிக்கப்படுகிறது என்றார். சைனாவின் பொருள் நிலை மோசமாக இருக்கிறதென்று ஜப்பான் சொல்லிவருகிறது. ஆனால் சமீபத்தில் தான் கிரேட் பிரிடனுக்கு 500லக்ஷம் பவுன் கடன் கொடுத்து உதவியிருக்கிறது. 50லக்ஷம் பவுன் தனியாகக் கொடுத்து சீன நாணய நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்ளும்படிக்கும் செய்தது. மேலும் 80லக்ஷம் பவுன் மதிப்புக்கு ராணுவ சாமான்களைக் கடனாகவே கொடுத்து உதவுகிறது.

மேலும் சீனர்களின் எதிர்ப்புக் குறையவுமில்லை. 7 நாட்கள் வரை தீவ்ர சண்டை செய்த பிறகுதான் கின்ஹ்வா எதிரிவசமாயிற்று. அதில் எதிரிக்கு ஏராள நஷ்டமும் நேர்ந்தது. விஷப்புகையை உபயோகித்ததால் தான் சீனர்

கள விடவேண்டி வந்தது. யூனன் மாகாணத்தில் சீனர்கள் டெங்சுங—லுங்லிங்—பயோஷான் முக்கோணத்தில் எதிரிகளைத் தடுத்து ஹுபே, அன்ஹவெய் என்ற இடங்களை மும்மரமாகத் தாக்கிவருகின்றனர்.

லண்டன் டைம்ஸ் பத்திரிகையில் சீனர்கள் நடத்திவரும் ஐந்து வருஷ சண்டையைப் பற்றி ஜூன் மீ 6வ பின்வருமாறு சொல்லப்பட்டிருந்தது.

"இந்த நீண்ட கஷ்டத்தில் சீனர்களின் தைரியம் மட்டில் குறையவில்லை. எதிரி எவ்வளவு பிரதேசங்களைப் பிடித்தாலும் சீனர்களின் ஊக்கத்தைக் குறைக்க முடியாது.

"சைனுவுக்கு உதவியனுப்பவேண்டியது அவசியம். வாஷிங்டனில் தயாராகியிருக்கும் ஒப்பந்தம் சைனுவிற்கு மீண்டும் உதவியனுப்பப்படுமென்ற விஷயத்தைத் தெரியப்படுத்துகிறது.

"மீண்டும் அதற்கு ஒரு அத்தாக்ஷி வேண்டுமானல் இந்தியாவில் சேமிக்கப்படும் பெரிய சைனியமே ஒரு அடையாளமாகும். ஏனென்ருல் இந்தச் சைனியம் பர்மாவைத் திரும்பப் பிடிக்கத் தீர்மானித்திருக்கிறது.

வி வி வி வி வீ வி வீ

**பஸிபிக் சம்பவங்கள்.** ஸிட்னி, டச்சுத் துறைமுகம், மிட்வே தீவுகள், இவைகளை ஜப்பான் ஏககாலத்தில் தாக்கியது தான் பஸிபிக்கில் நடந்த கப்பல் சண்டைகளாகும். அதிக தூரமுள்ள பல இடங்களைத் தாக்குவதென்பது ஜப்பானியரின் ஒரு தந்திரமாகும். இப்படித் தாக்கி, முக்கியமான லக்ஷியம் எது என்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் செய்வார்கள். ஆனல் எந்த இடம் தாக்கப்பட்டாலும் நேசநாடுகள் தயாராக இருக்கின்றனவென்பதும் இதிலிருந்து விளங்குகிறது. ஸிட்னியைத் தாக்க வந்த எதிரி நீர்மூழ்கிகளை ஆஸ்திரேலியர் முறியடித்தனர். டச்சுத் துறைமுகத்தைத் தாக்கியதும் ஒரு சிறிய சம்பவம் தான். டோகியோவை முன்பு தாக்கியதற்குப் பதில் தாக்குதலாக இதைக் கருதலாம். மிட்வே தீவுகளை எதிரிகள் பலமாகவே தாக்கினர். ஆனல் அமெரிக்கக் கப்பற்படை இதற்குத் தயாராக இருந்ததால் எதிரி நஷ்டத்துடன் பின்வாங்கி ஓடநேரிட்டது. அட்மிரல் நிமிட்ஸ் கூறும் விதமாக "பேர்ல் துறைமுகத்தை எதிரி தாக்கியதற்கு ஓரளவு வஞ்சகம் தீர்த்துக்கொள்ளப்பட்டது".

வி வி வி வீ வி வி வீ

**லிபியா பாலைவனம்.** ஜெர்மானியரின் திடீர் தாக்குதல் இங்கே தற்சமயம் பலிக்கவில்லை.

ஏப்ரல், மே மாதங்களில் மால்டாவைத் தாக்கியதும், கிரீஸ், கிரீட் இங்கிருந்து புதிய யூங்கர் விமானங்கள் வந்திருப்பதும், நெஷ்ரிங், பிஸ்மார்க் என்ற புதிய தளகர்த்தர்கள் வந்திருப்பதும் இந்த யுத்தத்தை மும்மரமாக நடத்தத்தான். இவ்விஷயங்களை நேசதேச அதிகாரிகளும் உணர்ந்து எங்கே, எப்போ சண்டை நேருமென்பதைத் தெரிந்துகொண்டனர். ஆனதால் தான் அச்சுநாட்டு டாங்கிப் படை முன்னேற முடியவில்லை.

ஆரம்ப காலங்களில் அச்சுநாட்டுப்படைகள் உட்புகுந்தது வாஸ்தவமானுலும் பாலைவனச் சண்டையில் அவர்களால் சமாளிக்க முடியவில்லை. இதுவரை ஐந்து தாக்குதல்கள் நடந்ததில் இரண்டு நேசநாடுகளாலும் மூன்று எதிரிகளாலும் செய்யப்பட்டன. எந்தப் பக்கம் முதலில் முன்னேற்றம் செய்யப்பட்டதோ அந்தப் பக்கம் ஜயத்துடன் கூடியிருந்தது.

பிரிடிஷாரின் குறுக்கு எதிர்ப்புகளை முறியடித்து 2,000 பேர்களையும் ஸர் கோஹன் என்பவனையும் கைதி செய்திருப்பதாகச் சொல்லுகின்றனர். ஸர் கோஹன் என்பரே கிடையாது. டொப்ரூக்கை எதிரி பிடித்தபாடில்லை. ஜெர்மன் ஆபிரிக்கப்படைத் தலைவனான ஜெனரல் லூட்விக் க்ரூவெல் கைதியானன். ஜெர்மன் அணிகள் மேற்கு நோக்கி ஓடுகின்றன. 266 டாங்கிகளையும், மற்றும் ஏராள

சாமான்களையும் போட்டுச் சென்றனர். ரோமல் தந்திரம் பலிக்கவில்லை. ரோடுண்டா ஸெகுவாலியைப் பிரிடிஷார் பிடித்துள்ளனர்.

நியூஸ் கிரானிகிள் பத்திரிகையின் ராணுவ நிருபர் பின்கண்ட விதமாகச் சொல்லியுள்ளார் "சீரதிடம் தான் முக்கியமானது. களைத்தால் தோல்விபெற முடியாது. ஜெனரல் ரிட்சி யந்திரப்படையை உபயோகித்தால் ஜெர்மன் டாங்கிகளை அழிக்கலாம்.

'ஸிரெனேகாவில் கோடைகாலம் வந்ததால் சண்டை நின்றுவிடாதென்றும் சிலர் நினைக்கின்றனர். அது உண்மைதான். நாஸிகளைக் கடுமையாகத் தாக்கி, மீண்டும் நாம் அவர்களை துரத்தியடித்தால் ட்ரிபோலி, பெங்காஸி உள்பட நமது வசமாகிவிடும்'.

வி வி வி வி வி வி வி

**ஜப்பானின் பலம் குறைந்துவருகிறது.**

"ஜப்பானுடைய கடற்படையை இரட்டிப்பாகவும், விமானப்படையை மூன்று மடங்காகவும் அதிகப்படுத்தினாலும் ஜப்பான் வெற்றியடைவது சிரமம். காலத்தை மாத்திரம் எதிர்பார்த்துக்கொண்டிருந்தால் அது அடைந்த வெற்றிகளெல்லாவற்றையும் நாம் தோல்விகளாக மாற்றிவிடலாம்.

சைனியங்களுக்குத் தளவாடம், பீரங்கிகளனுப்புவதும், விமானப்படைக்கு விமானங்களனுப்புவதும், கப்பற்படைக்குக் கப்பல்களனுப்புவதும் ஜப்பானுக்குச் சிரமமாகிவிடும். இதற்கு லாயக்காக சாமான்களின் உற்பத்தியும் ஜப்பானில் மட்டு.

கனிப் பொருள்கள் குறைவானதால் அயல்நாட்டு சாமான்களைப் பிரதீக்ஷிக்கவேண்டும். இனி தன் நாட்டில் கிடைக்கக்கூடியவைகளைத்தான் உபயோகித்துக்கொள்ளமுடியும். இதுவரைப் பிடித்துள்ள பிரதேசங்களில் பெரும் தொழிற்சாலைகளும் கிடையாது. இருந்தவைகளையும் நேசநாடுகள் பூ தகன முறைக்கு உட்படுத்திவிட்டன. இன்னும் சில மாதங்களுக்குள் அவைகளை ஜப்பான் உபயோகித்துக்கொள்ள முடியாது. அடுத்தபடியாக கப்பல் சிரமமுமிருக்கிறது. ஜப்பானுக்கு அதிக வியாபாரக் கப்பல்கள்தானுண்டு. நஷ்டமானவைகளைச் சுலபமாக ஈடுசெய்துகொள்ளவும் முடியாது.

அப்படி புதிதாகக் கட்டவேண்டுமானால் எஃகு தேவை. பீரங்கி முதலிய சாமான்களுக்கும் எஃகு தேவை. விமான இஞ்ஜின்களுக்கு எஃகு தேவை. ஆக ஜப்பானுக்கு எஃகு முதலில் தேவையாக இருக்கிறது.

**ஏழ்மையின் எல்லை.**

ஜப்பான் யுத்த சாமான்களைச் செய்வதையும், நேசநாடுகள் உற்பத்தி செய்வதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஜப்பானுக்குள்ள குறைவு தெரியவரும். பஸிபிக் பிராந்தியத்திற்கு முக்கியமாக அமெரிக்கா தான் அதிக சமான்களை அனுப்பி வருகிறது. அமெரிக்காவுடன் இவ்விஷயத்தில் ஜப்பானால் போட்டி போடவே முடியாது. உதாரணமாக விமானங்களை எடுத்துக்கொண்டால் ஜப்பான் மாதம் 450 வீதம் உண்டுபண்ணுகிறது. வருஷத்திற்கு இன்னும் அதிகமாகவே சொல்லுவோம், 5,750 ஆகும்.

அமெரிக்காவில் ஒரு வருஷத்திற்கு 60,000 விமானங்கள் கட்டி முடிக்கப்படும். இதில் 45,000 பைடர், பாம்பர், பாய்ச்சல் விமானங்கள்.

**டாங்கி உற்பத்தி.**

"ஜப்பானில் தயாரிக்கப்படும் டாங்கிகளின் சரியான எண்ணிக்கை தெரியவில்லை. வருஷத்திற்கு 750 என்று சொல்லப்படுகிறது. அமெரிக்காவில் இவ்வருஷம் 45,000மும், அடுத்த வருஷம் 75,000-மும் கட்டப்படும். ஆக அமெரிக்கா மாத்திரம் ஜப்பானைக் காட்டிலும் எவ்வளவோ அதிகம் உற்பத்தி செய்கிறது. பிரிடனும் அமெரிக்காவைப்போல சாமான்களை உண்டுபண்ணுகிறது. இதைத் தவிர கனடா, ஆஸ்திரேலியா, இந்தியா, தென் ஆபிரிக்கா முதலிய நாடுகளின் சாமான்களும் உபயோகப்படுத்தப்படும்".

லிபியாவில் இந்தியத் துருப்புகள் மிகவும் சாமர்த்தியமாகச் சண்டை செய்கின்றன. மூன்ருவது இந்திய மோட்டார் படைதான் பிர்ஹகிமிற்குக் கிழக்கில் எதிரித் தாக்குதலைத் தடுத்தது.

இஸயும் (Izyum) டிமோஷன்கோ கார்கவ் தாக்குதலை ஆரம்பித்தபோதே இஸயத்தை ஜெர்மானியர் தாக்குவார்களென்று எதிர்பார்க்கப்பட்டது. அதிகத் தீவிரமாக திடீரென்று முன்னேறியதால் ருஷ்ய நிலைகள் பல இடங்களில் பிளக்கப்பட்டன. இருந்தாலும் டானெட்ஸ் நதியைக் கடக்க முடியாமல் எதிரி தடுக்கப்பட்டான். ருஷ்யர்கள் முன்னுடியே கார்கவ்வைத் தாக்கியதால் எதிரி தற்காப்புப் போர் செய்து கொள்ளவே இஸயத்தைத் தாக்கினுன். ஆனுல் முதல்தாக்குதலை ருஷ்யர்கள் செய்யக்கூடுமென்றும், ஜெர்மன் முன்னேற்றத்தையும் தடுக்கி விடலாமென்றும் இதிலிருந்து தெரிகிறது. ருஷ்ய விமானப்படை அதிகரித்துவருவதால் ஜெர்மன் லுப்ட்வாபி தந்திரங்களை மாற்றிக்கொள்ள வேண்டியதாயிற்று. சென்ற வருஷம் ஜெர்மன் பாம்பர் தளங்கள் போர்முனைக்கு 500 மைல் பின்னுல் இருந்தன. தற்சமயம் யுத்தரங்கத்திலேயே இருக்கின்றன.

எப்படியிருந்தாலும் யூக்ரேனை விட்டு ஜெர்மானியரை விரட்டும் நோக்கத்துடன் ருஷ்யர்கள் இன்னும் சண்டையைச் செய்யவில்லை. ஆனுல் எதிரியைக் களைக்கச் செய்து ரிஸர்வ் படைகளையும் உபயோகித்துக் கொள்ளும்படி செய்வது தான் நோக்கம். இஸயத்தைக் காப்பாற்றியதால் காகஸஸை நோக்கி உடனே முன்னேற முடியாமல் எதிரி செய்யப்பட்டான். ஸ்மொலென்ஸ்க், வியாஸ்மா, லெனின்கிராட் முதலிய இடங்களிலும் இம்மாதிரி செய்யப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**கோலோன் படையெடுப்பின் முக்கியத்வம்.** 1,000 விமானங்கள் கோலோனைத் தாக்கின. மற்றும் 250 விமானங்கள் எதிரியின் கவனத்தை அப்புறப்படுத்திக் கொண்டும், எதிரியின் விமான எதிர்ப்பு பீரங்கிகளை வேறு பக்கம் திருப்பிக்கொண்டும் இருந்தன. இதில் 150 பிரிடிஷ் விமானப்பகுதிகள் மிக ஜாக்கிரதையாக ஈடுபட்டிருந்தன். எப்பவும் 200 முதல் 300 வரைதான் விமானங்கள் எதிரி நாட்டுப் படையெடுப்பில் ஈடுபடுவது சகஜம். ஆனுல் கோலோன் மீது நடந்த தாக்குதலை லண்டன் நகரத்தில் ஒரு ஜன நடமாட்டம் அதிகமாயுள்ள ஒரு முச்சந்திக்கு ஒப்பிடலாம். ஒன்றுக்கொன்று மோதிக்கொள்ளாமல் 300 மைல் வேகத்தில் பிரிந்து ஒரு நகரைத் தாக்குவதென்பது சாதாரண காரியமில்லை. இருந்தாலும் வெற்றிகரமாகவே தாக்குதல் செய்யப்பட்டது.

மொத்தம் 3,000 டன் எடையுள்ள குண்டுகள் போடப்பட்டனவென்ருல் ஈடுபட்ட விமானங்கள் மிகப்பெரியவைகளாகத் தானிருக்கவேண்டும். ஸ்டர்லிங், அவரோ லங்காஸ்டர், அவரோ மான்செஸ்டர் முதலியன ஈடுபட்டன. (இவை அமெரிக்க விமானங்களைக் காட்டிலும் பெரியவை).

ஒருதடவை 1,000 விமானங்களை உபயோகிப்பதென்ருல் மாதம் 2,000 புதிய விமானங்களைக் கட்டினுல்தான் சாத்தியமாகும். ருஷ்யா, மத்தியக்கிழக்கு, இந்தியா முதலிய நாடுகளுக்கு அனுப்புவதைத்தவிர அதிகமாக விமானங்கள் கட்டப்படுகின்றனவென்பதும் திருப்திகரமான விஷயம். மற்ற தேவைகளுக்குப் போனதுபோக மிச்ச விமானங்கள்தான் கோலோனைத் தாக்கச்சென்றன.

காமன்ஸ் சபையில் இதைப்பற்றி மிஸ்டர் சர்ச்சில் சொன்னபோது இந்த விமான யுத்தத்தில் ஒரு புதிய கட்டத்தைக் காண்பிக்கிறது என்ருர். இது ஒரு ஆரம்பமென்றும் இன்னும் அதிகமாகவே தாக்குதல் நேருமென்றும் கூறினுர். "அடுத்தபடியாக இன்னும் கடுமையான தாக்குதல் நேருமென்று" ஸர் ஆர்ச்பால்டு ஸிங்கிளேர் சொன்னுர். அமெரிக்க விமானங்கள் வந்ததும் இன்னும் அதிகமான தாக்குதல் நேரும்.

**ஹிட்லரும் லவாலும்.** மெடகாஸ்கரிலும், மார்டின்கூவிலும் பிரிடிஷாருக்கும் அமெரிக்கர்களுக்கும் லவால் படிந்து நடந்துகொண்ட காரணத்தினுல் ஹிட்லர் கோபமடைந்து அவனை பதவியிலிருந்து தள்ள நினைத்திருக்கிருன். ஸால்ஸ்பர்க் சந்திப்பில் ஹிட்லர் கார்ஸீகா, ஸாவாய், டுனிஸியா முதலியவைகளைக் கொடுப்பதாகச் சொன்னபடி நடந்துகொள்ளாததும் ஒரு காரணம். பிரான்ஸை அவமானமாக நடத்தும்போது முஸோலினியுடன் ஹிட்லர் சேர்ந்துகொள்ளுவான். ஆனல், ஹிட்லரின் விருப்பமில்லாமல் மெடகாஸ்கர் மார்டின்கூ விஷயத்தில் லவால் அமைதியாக நடந்துகொள்ளுகிருன் என்று சொல்லமுடியாது. ஒருக்கால் லவாலும் இதைப்பற்றி ஏதோ யோசித்துக் கொண்டுதான் இருக்கிருன். 'டிகால் கக்ஷியினரையும்' இங்கிலீஷ்காரர்களின் சிநேகிதர்களையும் அடக்குவதற்கு லவாலுக்கு இன்னும் சமயம் போதவில்லை. பிரிடிஷார் படையெடுத்தபோது ஸெயிண்டு நாஸேரில் உண்டான கலகமும், பாரிஸில் மாணுக்கர்கள் செய்த கலகமும், ஜெர்மானியருக்கு விரோதமாகச்செய்த சூழ்ச்சிகளும் ஜனங்களுக்குள்ள அருவெருப்பைத் தெரியப்படுத்துகின்றன. தனக்கு வேண்டியவர்களை லவால் வடக்கு, மேற்கு ஆபிரிக்காவில் நியமித்துக் கொண்டிருக்கிருன். இருந்தாலும் திடீரென்று ஒன்றும் அவனுல் செய்யமுடியாது. கொஞ்சம் கொஞ்சமாக ஏதாவது செய்யலாம். டோராயிட் பத்திரிகையின் ஆசிரியரான கிளமென்டின் கொலை சம்பந்தமாக லவாலையும் சேர்த்து வதந்தி உலாவுகிறது. டோராயிட் பத்திரிகைக்கு செல்வாக்கு குறைந்துவிட்டதால் பெர்லினைத் திருப்திசெய்ய லவால் அவ்விதம் செய்திருக்கலாமென்று நம்பப்படுகிறது.

வி வி வி வி வி வி வி

**ஹீட்ரிச்.** பொஹீமியா, மொரேவிய இவைகளின் உபதலைவரும், போலீஸ் தலைவரும், S. S. பகுதித் தலைவனும் ஆன ஹீட்ரிச்சு ஜூன் மீ 3௳ காயமடைந்து இறந்தார். ஒரு வாரத்திற்கு முன்பே காயமடைந்தார். இவனைக் கொன்றதற்காக ஸ்திரீகள் உள்பட 220 செக்கர்கள் கொலைசெய்யப்பட்டனர். இதுவே கொடுமை அரசாக்ஷிக்கு ஒரு அடையாளமாகும். இவன் நாஸி கொள்கைகளை நனகுணர்ந்தவன். வீமர் ஜனநாயக ஆட்சி காலத்தில் கப்பல் இலாகாவில் வேலைபார்த்தான். ராஜ துரோகத்திற்காக பதவியிழந்தான். நாஸிக் கட்சியின் ஆரம்ப காலத்தில் இவன்பேரில் துரோக குற்றமும், திருட்டு குற்றமும் சாட்டப்பட்டான். இக்குற்றம் செய்தாலும் நாஸிக்கட்சியில் பதவியிருந்தது. 1934-ம் ௵ ஜூன் மீ 30௳-யில் கிரிகர் ஸடிராஸ்ஸர் எனபவனைக் கொன்று ஹிட்லரின் பிரியத்தை நாடினுன். போலந்திற்கு வந்ததும் முதல் இரண்டு வருஷங்களில் 82,000 ஸ்திரீ புருஷர்களைக் கொன்ருன், யூகோஸ்லாவியாவில் 60,000 பேரையும், பொஹீமியா மொரேவியாவில் 1941-ம் ௵ ஸெப்டம்பரில் 336-ம் கொன்று 1,500 பேரை ரகசியப் போலீஸார் வசம் ஒப்படைத்தான். சென்ற மாதம் பாரிஸுக்கு வந்ததும், 460 பிரெஞ்சுக்காரரைக் கொன்ருன்.

---

# ஜெர்மனியில் இரண்டாவது போர்முனை.

## ஹிட்லர் பிரகடனத்தில் தப்பு அர்த்தம் பண்ணிக்கொண்ட வாக்கியம்.

டொக்ளாஸ் ரீட் என்பவர் எழுதியது.

ஜெர்மானியர்கள் கிரிமியாவில் தாக்க ஆரம்பித்ததும் ருஷ்யர்கள் கார்கவ்வை நோக்கி முன்னேறுகிருர்கள். இம்மாதிரி யுத்தம் மும்மரமாக முடிவுக்கு வரக் கூடியதாக விருத்தி யடையும்பொழுது, பிரிடனில் அச்சு நாடுகளுக்கு எதிராக இரண்டாவது போர்முனை ஏற்படுத்தும்படி வற்புறுத்தப்படுகிறது. சண்டை

செய்யும் போர்வீரர்களும், பொது மக்களும் அம்மாதிரி நிர்ப்பந்திக்கிறார்கள். லண்டனிலுள்ள ஜெர்மனி ஆக்கிரமித்த நாடுகளின் பிரதிநிதிகள் அதை ஆதரிக்கிறார்கள். லண்டனில் பிரசுரமாகும் ருஷ்யர்கள் கக்ஷியைச் சேர்ந்த பத்திரிகையும், இம்மாதிரி இரண்டாவது போர்முனை ஏற்படுத்தும்படி வாராவாரம் பிரசுரித்து வருகிறது. அமெரிக்கர்களும் இதற்கு அனுகூலமாக இருக்கிறார்கள்.

பிரிடிஷ் அரசாங்கத்தின் தலைமை அதிகாரி இரண்டாவது போர்முனை ஏற்படுத்த சந்தர்ப்பம் சரியாக இல்லை என்ற எச்சரிக்கை செய்த போதிலும், தேசத்தார் பூராவும் இம்மாதிரி தாக்குவதற்கு அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள். பொதுவாக பிரிடிஷ் அரசாங்கத்தாரும் இதை விரும்புகிறார்கள.

நேசநாடுகள் இப்பொழுதோ, சற்று பிற்பட்டோ ஜெர்மனியைத் தாக்கினாலும் சரி, தாக்காவிட்டாலும் சரி, ஜெர்மனியில் ஏற்கனவே இரண்டாவது போர்முனை ஏற்பட்டுவிட்டது.

ஜெர்மனியிலே ஹிட்லர் ஆட்சிக்கு அடிப்படையான எதிர்ப்பு ஏற்பட்டதின் அறிகுறிகள் தெரிகின்றன. யுத்தத்தில் ஜெர்மனி வெற்றியடையாதென்றும், நீடித்து நடக்கும் யுத்தத்தினால் நஷ்டங்களும, பரிமுதலும் அதிகம் ஏற்படும் என்றும் பயந்து, எல்லாரும் ஒன்று சோந்து ஹிட்லரின காலை வாரிவிட பிரயத்தனப்படுகிறார்கள். 1918-ம் வருஷத்தில் ஜெர்மனி எந்நிலைமையில் இருந்ததோ இப்பொழும் அப்படியே இருக்கிறது. இந்த வருஷத்தில் பாக்கி மாதஙகளிலும் அநேக ஜெர்மானியர்கள் குண்டுக்கு இரையாவார்கள், ஆனால் ஜெர்மனியில் ஹிட்லரின் நடவடிக்கையை மறுதளிக்கும் காக்ஷிகள் தந்திரமாகத் தோன்றச் செய்யப்படுகின்றன. பேடனின் புதிய இளவரசர் மாக்ஸ் என்பவர் அந்தப் பதவிக்காகத் தயாரிக்கப்படுகிறார்.

சென்ற மாரிகாலத்திலேயே ஹிட்லர் போன பிறகு ஜெர்மனியில் ஆட்சி செய்ய விரும்பிய மனிதர்கள் ஹிட்லரைப் புறக்கணிக்க ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். அதை முன்னிட்டுத்தான் ஹிட்லரை தலைமை அதிகாரத்துக்கு நியமிக்கப்பட்டது. இப்பொழுது நேரிடக்கூடிய அழிவுக்கு அவன்தான் பொருப்பாளி. அவன் சென்ற பிறகு ஜெர்மன் பொதுமக்களுக்கும் மற்ற உலகத்தாருக்கும் "குற்றவாளி தொலைந்து விட்டான். எஙகள்பேரில் நீஙகள் குறை சொல்ல ஒன்றுமிருக்காது" என்று சொல்லப்படும்.

இப்பொழுது ருஷ்யாவை ஹிட்லர் தாக்கும் பொழுது இந்த மனிதர்கள் அவனைக் கீழே தள்ள தயார்செய்து வருகிறார்கள். ஹிட்லருக்கு இந்த சூழ்ச்சி தெரிகிறது. அவனைத் தனியாகவிட்டதில் அவனுக்குப் பயம் உண்டாகிறது. அவர்களின் சூழ்ச்சியைக் கெடுக்க அவன் வழி தேடுகிறான். அவனுடைய முந்திய பிரகடனத்தில் குறிப்பிடத் தக்க வாக்கியம் என்னவென்றால் 'பேர் குறிப்பிடாத சில ஜெர்மானியர்கள் தஙகள் கடமையைச் செய்யத்தவறி, ரஜா அபேக்ஷித்திருப்பதைக் குறித்து ஹிட்லர் புகாராகச் சொன்னதுதான்.' (இந்த வாக்கியம் உலகத்தாரால் தவறுதலாக எண்ணப்பட்டது). "அவர்களுக்கு அந்த ரஜா கொடுக்க முடியாது. இந்த ஒன்பது வருஷகாலத்தில் மூன்று நாள் ரஜா கூட நான் பெற்றுக்கொள்ளவில்லை" என்று ஹிட்லர் சொன்னான். படை வீரர்கள் களைப்புற்று லீவு அபேக்ஷித்ததாக உலகத்தார்கள் தவறுதலாக எண்ணிவிட்டார்கள். ஆனால் வியாதியோ அல்லது களைப்போ ஏற்பட்டிருப்பதாகச் சாக்குச் சொல்லிக் கொண்டு, சில பிரக்யாதிபெற்ற தலைவர்கள ஹிட்லர் அழிந்து விடுவான் என்று தெரிந்து, பொறுப்பு தஙகளை விட்டு விலகவேண்டியதறகாக லீவு அபேக்ஷித்திருப்பதைக் குறித்துத்தான் ஹிட்லர் சொல்லியிருக்கிறான். இதுதான் ஜெர்மனியில் இரண்டாவது போர்முனை.

---

# ஜப்பான், ஸப்ளைகளுக்காக போராடுவது.

(ஜான் மாக்டோனல்ட் எழுதியது).

ஆசியாவை ஜயிக்க பெரிய பிரயத்தனம் செய்து, ஒரு நாளில் அவற்றை யெல்லம் உபயோகப்படுத்துவதற்காக நீண்ட காலமாக ஜப்பான் பொருள்களை சேகரித்து வைத்தது. அது அநேக வருஷங்களாக பீரங்கிகள், வெடி குண்டுகள், கவசத்தகடுகள், வெடிமருந்து, எண்ணெய் இவற்றைதான் பிறநாடுகளை ஆக்கிர மிக்க ஆரம்பிக்கும்பொழுது உபயோகப்படுத்த சேமித்து வைத்தது.

இதுவரையில் ஜப்பானின் யுத்தப் பிரயத்தனத்தில் அதன் கப்பற் படையே பேருதவியளித்து வந்தது. ஆனால் அதன் ஸப்ளை பொருள்கள் வரவர குறைந்து போய் அதற்குப் பொருள்கள் தேவையாயிருக்கும் இந்த சமயத்தில் ஜப்பானிய கப்பற்படை எப்படி சமாளிக்கப் போகுமோ என்பது தெரியவில்லை.

ஜப்பானுடைய உற்பத்தி எவ்வளவு என்பது யுனைடெட் ஸ்டேட்ஸ் உற்பத்தி யுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியவரும். ஒரு வருஷத்திற்கு ஜப்பானில் 70,00,000 டன் எஃகு உற்பத்தி செய்யப்படுகிறது. யுனைடெட் ஸ்டேட்ஸில் 8,80,00,000 டன் எஃகு உற்பத்தியாகிறது. அலுமினியம் ஜப்பானில் 24,000 டன்களும், யுனைடெட் ஸ்டேட்ஸில் 4,00,000 டன்களும் உற்பத்தி செய்யப்படு கின்றன. ஜப்பானில் வருஷத்திற்கு 70,00,000 பீப்பாய் எண்ணெய் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால் அதற்கு அதைப்போல் 5 அல்லது 6 மடங்கு எண்ணெய் தேவையாக இருக்கிறது.

யுத்தம் நடக்கும் வரை ஜப்பானுக்கு பழைய இரும்பு, எண்ணெய், செம்பு, இரும்பு சம்பந்தப்பட்ட கருப்பு உலோகங்கள், அவைகளைக்கொண்டு சாமான்கள் செய்யும் யந்திரம், ஈயம், தகரம், அலுமினியம், காரீயம், ரஸம், மாங்கனீஸம், பாஸ்வரம், க்ரோம், நிக்கல் இந்த ஸப்ளைகள் கிடைக்காது. பிலிப்பைன்ஸ் தீவு களிலிருந்து க்ரோமும், இரும்பு உலோகமும்; கிழக்கிந்தியத் தீவுகளிலிருந்து எண்ணெயும், உப்புகளும், மலேயாவிலிருந்து ரப்பரும், ஈயமும் கிடைத்தாலும் பெரிய திட்டத்தில் அவற்றைத் தயாரிக்க ஜப்பானுக்கு தொழிற்சாலைகளோ, நிபுணர்களோ கிடையாது.

மாதத்திற்கு 400 விமானங்கள் வீதம் ஜப்பானில் செய்யப்படுகிறது. யுத்தத் திற்கு முன் கொஞ்சம் விமானங்கள் ஜெர்மனியிலிருந்தும், இதாலியிருந்தும் வாங்கப்பட்டன. யுனைடெட் ஸ்டேட்ஸில் எல்லாவித விமானங்களும் மாதத்திற்கு 3,500-க்கு மேல் தயாரிக்கப்படுகிறது வருஷத்தில் 1,35,000 விமானங்கள் வீதம் நேசதேசங்கள் எல்லாம் சேர்ந்து தயாரிக்கின்றன.

ஆள் பலத்திலும் ஜப்பானில் உள்ளவர்கள் குறைவுதான். ஜப்பான் சைனி யத்தில் 50,00,000 பேர்கள் தானிருக்கிறார்கள். இருப்புப்படை 30,00,000 பேர்கள் இருக்கிறார்கள். நேசதேசத்தார் வசமிருக்கும் இருப்புப் படையின் எண்ணிக்கை எவ்வளவென்று சொல்லமுடியாது. அச்சுநாடுகளின் சைனிய பலம் 1,45,00,000 பேர்கள். நேசதேசத்தார்களின் படைகளோ 1,50 00,000. மேலும் படைப் பலத்தை மதிப்பிடுவதற்கு முன் போர்வீரர்களின் குணம், அவர்களுடைய முஸ்தீப்பு, அவர்களுடைய நிலைமை, ஸப்ளைகள் கிடைக்கக்கூடிய இடத்திற்கு சமீ பத்திலிருப்பது, கப்பல் போக்குவரத்துக்கு அதிகாரம் வகிப்பது, பாதுகாக்க வேண்டிய போர்முனையின் விஸ்தீர்ணம், இவைகளைக் கவனிக்கவேண்டும். ஜப்பான் அதன் கூட்டாளியான அச்சுநாட்டுக் கொள்ளைக் கூட்டத்தாருடன் சேர்ந்துவிடாமல் தடுத்துவிட்டால் தன் ஆள் பலத்தையும், உற்பத்தியும்தான் நம்பியிருக்கவேண்டும். ஆனால் நேசதேசத்தார்கள் கூடிய சீக்கிரத்தில் பஸிபிக் யுத்தப் பிராந்தியத்தில் ஜப்பானைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகமுள்ள சைனியங்களைப் போருக்கு அனுப்பக்கூடும்.

## டூலிட்டில் செய்த தாக்குதலும், ஜப்பானின் ஆகாய விமானக் கைத்தொழிலும்.

## யந்திரசாலை மத்திய ஸ்தாபனம் தாக்கப்பட்டது?

அமெரிக்க விமானங்கள் ஜப்பானிய நகரங்களை வெடிகுண்டுகளால் தாக்கியதை தளகர்த்தர் டூலிட்டில் சொன்னதிலிருந்து இன்னும் சில விஷயங்கள் தெரிகின்றன. நடுப்பகலில் பூமிக்கு வெகு சமீபத்திலிருந்து நல்ல சீதோஷ்ண நிலையில் இந்தத் தாக்குதல் நடந்தது என்று சொன்னான். ஜப்பானியர்கள் தாங்கள் தான் திடீரென்று தாக்கக்கூடும் என்று தற்புகழ்ச்சி கொண்டிருந்தார்கள். ஆனால் அமெரிக்கர்கள் அதேமாதிரி திடீரென்று தாக்கியிருக்கிறார்கள். டோகியோவின் தென்புறத்திலுள்ள கப்பல் கட்டுமிடத்தில் புதிய யுத்தக்கப்பல் ஒன்று தாக்கப் பட்டதை கேட்க வெகு ஆச்சரியமாக இருக்கிறது.

ஆனால் அவர் சொன்ன செய்திகளில், "நகோயாவுக்கு அருகில் ஆகாய விமானத் தொழிற்சாலையில காலமைல் நீளத்திற்கு எரிகுண்டுகள் போடப் பட்டன" என்ற செய்தி மிகவும் முக்கியமானது. இது மிட்ஸுபிஷியிலுள்ள பெரிய யந்திரசாலையாகத்தான் இருக்கவேண்டும். அங்குதான் பைடர்களும், பாம்பர்களும் சேகரிக்கப்பட்டிருக்கின்றன.

ஜப்பானில் ஆகாய விமானம் உற்பத்தி செய்யும் முறை ஒரு வகைப்பட்டது. அதாவது பல இடங்களில் தயாரிக்கப்பட்ட உருபபுகளைக்கொண்டு முக்கிய தொழிற்சாலையில்தான் விமானங்கள் தயாரிக்கப்படுகின்றன. அதனால் விமான பலம் மிகவும் குறையும் முக்கிய தீவான ஜப்பானில் பல இடங்களில் அரசாங்கத் தார் மேல் பார்வையின் கீழ் 21 தொழிற்சாலைகள் இருக்கின்றன. அவை ஒவ்வொன் றும் வேலை செய்யப்பட்ட பொருள்களான ஆகாய விமானங்களின் உருப்புகள், மோட்டார்கள், சிறகுகள், தரையில் இறங்குவதற்கான கருவிகள் வகையரானவை நகோயாவுக்கு வெளிப்புறங்களிலுள்ள மிட்ஸுபிஷி யந்திரசாலைக்கு அனுப்பு கின்றன.

ஆகையால் இந்த யந்திரசாலைக்கு சேதம் ஏற்பட்டிருந்தால் அது எப்படி பாதகமாக இருக்கும் என்பது தெரியும். இம்மாதிரி சேர்த்துவைக்கப்பட்ட சாமான்களும். சேகரிக்கப்பட்ட தயாரான பொருள்களும் அழிக்கப்பட்டால் தினசரி விமானங்கள் செய்வது தடைபட்டுவிடும். யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிற இதர நாடுகளைக்காட்டிலும் மெதுவாகத்தான் ஜப்பான் ஆகாய விமானங்கள் உற்பத்தி செய்கின்றது. ஒன்றரை மணிக்கு ஒரு விமானம் செய்கிறதென்பது சரியான மதிப்பாக இருக்கும். ஆனால் யுனைடெட் ஸ்டேட்ஸோ $8\frac{1}{2}$ நிமிஷத்திற்கு ஒரு விமானம் செய்கிறது.

இப்பொழுது அமெரிக்கா தாக்குவதினால் ஜப்பானில் விமான உற்பத்தி இன்னும் குறைந்துவிட்டது.

---

## கொரியாவில் ஜப்பானின் புதிய திட்டம்.

(வாஷிங்டனிலிருந்து கேபிள் மூலம் அனுப்பிய செய்தி).

ஜப்பான் அடிமைகளை விடுவிப்பதாகவும், ஜப்பானின் புதிய திட்டத்தில் புகழ்களும், விநோதங்களும் ஏற்படுமென்றும் அடிக்கடி ஜப்பானிய ரேடியோ வில் சொல்லப்படுகிறது. இதே சந்தர்ப்பத்தில் வாஷிங்டனில் ஜப்பான் நடவடிக் கையைக் குறித்து ஆராயப்படுகிறது. ஆக்கிரமிக்கப்பட்ட நாடுகளிலுள்ள ஜனங்

களை அடிமையாக்கி நிர்ப்பந்தப்படுத்தியும், ஜப்பான் செய்துவரும் கொடுமைகளைக்கேட்க டோகியோ ரேடியோவில் சொல்லப்படும் வெளிப்படையான பொய்கள் இரண்டு மடங்கு பரிகஸிக்கத் தக்கதாக இருக்கின்றன.

கொரியாவில் ஜப்பானியரின் 'புதிய திட்டப்படி' என்னென்ன நேர்ந்தது என்று விவரமாக அமெரிக்காவில் பிரக்கியாதிபெற்ற 'ஆசியா' என்ற பத்திரிகையில் எழுதப்பட்டிருக்கிறது அவ்வியாசத்தின் தலையங்கம் 'ஜப்பானின் புதிய திட்டத்தின்படி கொரியாவில் நடைமுறைச் செய்திகள்' என்று கண்டிருந்தது. ஜப்பானிய வெற்றிகளினால் ஜனங்களுக்கு என்ன நேரிடுமென்று கொரியாவை ஜப்பானியர் அடிமையாக்க ஜாக்கிரதையாகப் போட்ட திட்டத்திலிருந்து தெரிய வரும். முப்பத்திரண்டு வருஷம் ஜப்பானிய ஆட்சியினால் கொரியா அருவெறுப்பான தேசமாக ஆய்விட்டது.

## வருமையும், பசிப்பிணியும்.

கொரியா அதன் தேச சரித்திரத்தில் எப்பொழுதும் கண்டிராதபடி வருமையும், பசிப்பிணியும அதிகரித்திருக்கிறது. அந்த தேச ஜனங்களின் க்ஷேமத்தைப் புறக்கணித்து அந்த தீபகற்பத்திலுள்ள சம்பத்தெல்லாம் ஜப்பானுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. ஜப்பானியர் வெற்றியடைந்ததில் இப்பொழுது முறைப்படி வீடுவீடாகக் கொள்ளையடித்து வருகின்றனர். இப்பொழுது குடியானவர்களுக்கும், தொழிலாளிகளுக்கும் பாதித் திட்ட உணவுதான் கொடுக்கப்படுகிறது. ஒரு வாரத்திற்கு ஒரு மனிதனுக்கு இரண்டு முஷ்டி அரிசிதான் கொடுக்கப்படும். இதனால் கொஞ்சம் கொஞ்சமாக நாளடைவில் பட்டினியால் உண்டாகும் கெடுதி நேரிடும்.

சாதாரண உரிமைகள்கூட கொரியர்களுக்குக் கொடுக்கப்படவில்லை. அவர்கள் வீட்டில்கூட கொரியா பாஷையைப் பேசக்கூடாது. கொரியா ராணுவ கவர்னர் ஜெனரல் அதிகாரத்திற்குட்பட்டது. அவருக்கு ஒரு மனிதன் உயிரை வைக்கவும், எடுக்கவும் பூரண அதிகாரம் உண்டு. அந்த தீபகற்பத்தில் நான்கு லக்ஷம் போலீஸ் வீரர்களும், ஜப்பானிய வீரர்களும் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த ஜனத்தொகையில் கொரியர்களுக்குள்ளேயே வேவு பார்த்துச் சொல்லுவதற்கு இரண்டு லக்ஷம் இழிவான கொரியர்களைச் சேர்த்திருக்கிறார்கள். கொரியர்களை பயமில்லாமல் ஜப்பானியர்கள் கன்னத்தில் அறைகிறார்கள். காலால் உதைக்கிறார்கள்.

## கொரியர்கள் தளர்ச்சியடையவில்லை.

ஜப்பானியர்களுக்குத் தனிப்பள்ளிக்கூடங்கள். கொரியர்களுக்குத் தனிப் பள்ளிக்கூடஙகள். ஜப்பானியரின் ஜனத்தொகையைக் காட்டிலும் அங்கிருக்கும் கொரியர்களின் ஜனத்தொகை ஐம்பது மடங்கு அதிகமாக இருந்தாலும் கொரியர்களின் பள்ளிக்கூடத்திற்கு எவ்வளவு பணம் செலவிடக்கூடுமோ அவ்வளவு பணம் ஜப்பானியர் பள்ளிக்கூடத்திற்கும் செலவு செய்யப்படும். கொரியர்கள் தளர்ச்சியடையாமலும், ஜப்பானியருடன கலந்துவிடாமலும், கொரியர்கள் விரோத மனப்பான்மையில் இருப்பதினால், ஜப்பானிய சைனியத்தில் அவர்களை வேலைக்குச் சேர்த்துக்கொள்ள ஜப்பானியர்கள் துணியவில்லை. ஜப்பானியர்கள் அடக்கமான நகரவாசிகளையும், தேசாபிமானிகளையும் கொலைசெய்து வருகிறார்கள். கொரிய தேசாபிமானிகள் முக்கியமான ஜப்பானிய அதிகாரிகளைத் தாக்கி வருவதற்கு அநேக உதாரணங்கள் இருக்கின்றன. இப்பொழுது ஒரு லக்ஷம் கொரியர்களுக்கு மேல் சேகரிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ரகசிய சங்கங்களாகக்கூடி வேலை செய்கிறார்கள். பஸிபிக் யுத்தத்தில் ஜப்பானுக்கு அருகிலிருக்கும் சமுத்திரத்திலுள்ள ஜப்பானிய கப்பற்படைகளை ஒழித்துவிட்டால், கொரியாவும் ஜப்பானுக்கு எதிரியாகக் கிளம்பி, பயன்தரக்கூடிய விதமாக கொரியர்கள் ஜப்பானைத் தாக்குவார்கள் என்று கொரிய தேசாபிமானித் தலைவர் கிம்ஸான் என்பவர் அறிவிக்கிறார்.

# ஐந்தொகைக் கணக்கு.

(இஸ்தான்புல் 21—4—42-தேதி "யேனி ஸாதா" பத்திரிகையிலிருந்து ;

முஸ்யேயின் காஹிட் யால்சின் எழுதியது).

இந்தப் பத்திரிகையை வாசிப்பவர்களில் என் பெயரைக்கண்டு கையெழுத்துப் போட்டு எழுதியிருக்கும் கடிதத்தில் என்னைப் பதில்கொடுக்கும்படி சில கேள்விகள் கேட்டிருக்கிறார். அவையாவன, "முடிவில் பிரிடன் வெற்றியடையு மென்று உனக்கு இன்னும் நம்பிக்கை யிருக்கிறதா? அல்லது ஏற்கனவே பிரிடனுக்கு வெற்றிகிடைக்குமென்ற அபிப்பிராயம் எப்படியோ உனக்குண்டாகி அதைக் கடைசிவரையில் சாதிக்க வேண்டுமென்று பிரிடன் வெற்றியடையும்போல் நம்பிக்கை யிருப்பதாகப் பாசாங்கு செய்கிறாயா?"

இந்தக் கேள்விகள் எனக்கு வியப்பை உண்டாக்கின. இந்த யுத்த ஆரம்பத்தில் சம்பவங்கள் எப்படி நேரிடுமோ என்று தெரியாமலிருக்கும்பொழுதே எனக்கு பிரிடன் வெற்றியடையுமென்ற அபிப்பிராயமானது, பிறகு நாளுக்குநாள் நடக்கும் நடவடிக்கையிலிருந்து ஊர்ஜிதமாகிக் கொண்டுவருகிறது. என்னுடைய அபிப்பிராயத்திற்கு விரோதமாக சில ஜனங்களுக்காகவாவது அபிப்பிராயம் இருக்குமா என்பது என்னால் நம்ப முடியவில்லை. ஆனால் இந்தக் கேள்விகளினால் சிந்தனையும், ஆராய்ச்சியும் வேண்டியிருக்கிறது.

யுத்தம் ஆரம்பித்து இரண்டரை வருஷங்களாயின. இதன் நடுவில் பிரிடனுடைய பலம் அதிகரித்திருக்கிறதா அல்லது குறைந்திருக்கிறதா? இறுதியில் ஜனநாயக நாடுகள் தோல்வியடையுமோ என்று சந்தேகப்படக்கூடிய தாக இருந்தால் இந்தக் கேள்விகளின் பதிலைப் பொருத்திருக்கிறது.

முதன் முதலாக யுத்தம் ஆரம்பித்து $2\frac{1}{2}$ வருஷமாகியும் அதற்கு முடிவு எப்பொழுது என்று தெரியாமலிருப்பதிலிருந்தே பிரிடனுக்கும் நேசதேசத்தார் களுக்கும் அனுகூலமான பயன் உண்டாகும் என்பதைக் காட்டவில்லையா? மின்னல் போல் வெற்றிகள் கிடைத்திருப்பதாகச் சொல்லிவந்த அச்சுநாடுகள், இப்பொழுது அம்மாதிரி வார்த்தையையே உபயோகிக்கவில்லை என்று சொல்ல வில்லையா? ஜெர்மானியர்களுக்கு சீக்கிரம் வெற்றி கிடைத்துவிடுமென்று வாக்குறுதி செய்யப்படவில்லையா? 8 அல்லது 10 மாதங்களுக்குமுன் ருஷ்யா பூராவும் அழித்துவிடப்படும் என்று குறிப்பிடப்படவில்லையா? லண்டனில் எதிரித் துருப்புகள் பிரவேசிப்பதற்கு நாள் வைத்திருந்ததல்லவா?

இப்பொழுது அம்மாதிரி பிரசாரம் அச்சுநாடுகள் சொல்லிவருவதில்லை. வெகு வருஷங்களாக ஜனநாயக அரசுகள் அலக்ஷியமாகவும், ஆயத்தமில்லா மலிருந்தபோதிலும் அநேக வருஷங்களாகத் தயாரித்துவந்த அச்சுநாடுகள் இறுதியான முடிவை அடையத் தவறிவிட்டன. ஜனநாயக அரசுகள் இப்படி ஆயத்தமில்லாமல் இருந்திருக்குமென்று ஒருவராலும் நினைத்திருக்கமுடியாது. நேசதேசத்தார்கள் பலஹீனமாய் இருக்கும்பொழுதே மிக்க பலம் வாய்ந்திருந்த அச்சுநாடுகள் அவர்களை ஜயிக்கமுடியாமல் போனதைப்பார்க்க அச்சுநாடுகளுக்கு வெற்றி தெய்வீகமாக கிடைத்தால்தான்.

1940-ம் வருஷம் கோடைகாலத்தில் ஜனநாயக அரசுகளைப் பிரித்திருப்பதை யும், யுத்தகளத்திலிருந்து பிரான்ஸை ஒதுக்கியிருப்பதையும் நாம் மறக்கக்கூடாது. சென்ற மகாயுத்தத்திற்குப் பிறகு பிரான்ஸ் உலகத்திலேயே மிகுந்த ராணுவ பலம் பொருந்தியதாக பிரசித்தி பெற்றிருந்தது. மாக்னாட் அரண் ஜெர்மானிய ருக்கு உடைக்கமுடியாத தடையாகக் கருதப்பட்டது. தரைச் சண்டையில் ஜனநாயக நாடுகளுக்கு பிரெஞ்சுச் சைனியம் மூலபலமாக இருந்தது. மேற்கிலும் சமீபக் கிழக்கிலும், தூரக்கிழக்கிலும் ஜனநாயகங்களைப் பாதுகாக்கபிரெஞ்சுக்காரர் களையே பொறுப்பாக வைத்திருந்தது. யுத்த ஆரம்பத்தில் தளகர்த்தர் வேக்யாண்டின் தலைமையின்கீழ் ஒரு சைனியம் ஸிரியாவிலிருந்து புறப்பட்டு

பால்கன் நாடுகளின் வழியாகச்சென்று ஜெர்மனியைத்தாக்க எத்தனிக்க வில்லையா? அப்பொழுது ஜெர்மனிக்கு நேசதேசமாக யிருந்த ருஷ்யாவை காகஸஸில் நசுக்கிவிட பிரெஞ்சு சைனியத்தை எதிர்பார்க்கவில்லையா? 1940-ம் வருஷம் ஜூன் மாதத்தில் பிரிடன் அச்சுநாடுகளின் பேரில் போர் தொடுத்தபோது பிரெஞ்சு சைனியத்தை நம்பியிருக்கவில்லையா? ஆனால் 1940-ம் வருஷம் ஜூன் மாதத்தில்தான் பிரிடனுக்கு அதன் எண்ணம் வீண் என்று தோன்றிற்று. டங்கர்க்கிலிருந்து 1,000 பீரங்கிவரை கைப்பற்றும்படி விட்டுவிட்டு, பிரிடன் பின்வாங்கும்படி நேரிட்டது. இத்தகைய தோல்வியினால் பிரிடனுக்குத் தரைப் படை யில்லாமல் போய் யுத்தத்திற்கு முன்னுள்ள நிலைமையைக்காட்டிலும் பிரிடன் பலஹீனமான நிலைமையை அடைந்துவிட்டது.

ஆனால் பிரிடன் தோற்கடிக்கப்பட்டதா? ஜெர்மானியர்கள் பிரிடனில் வந்து இறங்கவும், பிரிடிஷாரை கீழ்ப்படியும்படி செய்யவும் முடிந்ததா? பிரிடிஷ் கப்பல்களை மூழ்கடித்தும், பிரிடிஷார்களை பசிப்பிணியினால் வருந்தும்படி செய்யவும் முடிந்ததா?

இல்லை. பெரிய பாறையில் அலைமோதி பின்வாங்குவதுபோல் அச்சுநாடு களின் படைகள் பிரிடிஷ் சமுத்திரக்கரையிலிருந்து பின்வாங்கி யுத்தத்தில் சம்பந்தப்படாத நாடுகளைத்தாக்க ஆரம்பித்தன. வெளித்தோற்றத்திற்கு அச்சு நாடுகள் வெற்றிக்கு மேல்வெற்றி பெற்றுவருவதுபோல் தோன்றினாலும் இந்த அவகாசத்தில் பிரிடன் சைனியங்களைச் சேர்க்கவும், அவைகளுக்குப் பயிற்சி அளிக்கவும், புது கப்பல்கள் கட்டவும், புது டாங்கிகள், பீரங்கிகள் உற்பத்தி செய்யவும் முடிந்தது. இருந்தபோதிலும் ஆபிரிக்காவில் பிரிடன் இதாலியை முறியடித்ததும், அச்சுநாடுகளால் அதைத் தடுக்கமுடியவில்லை. பிரிடன் அபிஸீனியாவை விடுவித்தது. எரிட்ரீயாவில் சத்துருவில்லாமல் ஒழித்தது. இதாலிய படைகளும் ஜெர்மன் படைகளும் சேர்ந்து எகிப்திலிருந்தும், மால்டா விலிருந்தும் பிரிடிஷ்காரர்களை அகற்றமுடியவில்லை. இதற்கு மாறாக மத்திய கிழக்குப் பிரதேசத்தில் காகஸஸ்வரை பிரிடிஷ் ராஜ்யம் ஸ்திரமாக ஸ்தாபிதம் ஆய்விட்டது. ருஷ்யாவில் ஜெர்மனியின் முக்கியமான படைகள் இழக்கப்பட்டும், ஜெர்மனிக்குப் பலம் குறைந்தபொழுது பிரிடன் புதுப் படைகளைத் திரட்டவும், யுனைடெட் ஸ்டேட்ஸின் எல்லையற்ற உதவியை சம்பாதிக்கவும் முடிந்தது.

இப்பொழுது நிலைமை இம்மாதிரி. யுத்த ஆரம்பத்திலிருந்த மாதிரி அச்சு நாடுகள் இப்பொழுது இல்லை. அச்சுநாடுகளின் படைகள் குறைந்துவிட்டன. இப்பொழுது அவர்கள் கடுமையாக சோதிக்கப்படுவார்கள். பிரிடிஷார் முற்றிலும் தயாராகவிட்டார்கள். பகல் காலங்களில் ஜெர்மன் நகரங்களின்மேல் அவர்கள் வெடிகுண்டுகளைப் போடுவதைப் பார்த்தால் பிரிடிஷாருக்கு ஆகாய விமானப்படை பலம் மேன்மையாக இருப்பது தெரியவரும்.

---

## அமெரிக்கக் கடிதம்.

## நேசதேசத் தந்திரத்தின் புதிய மனோபாவம்.

## 1942-லேயே ஜெர்மனியை முறியடித்துவிடலாம்?

(எட்வேடு மான்ட் கோமரி எழுதியது).

(லண்டனிலிருந்து கேபிள் மூலம் கிடைத்தது).

இனி வரப்போகும் யுத்தத்திற்கென்று பிரத்தியேகமாக வைக்கப்பட்டிருந்த எஃகுப்பொருள்களையும், இதர மூலப்பொருள்களையும் தற்போது நடக்கும் யுத்தத் திற்கே உபயோகித்துவிடும்படி அமெரிக்க உற்பத்தி மந்திரி மிஸ்டர் டோனல்டு M. நெல்ஸன் உத்தரவிட்டிருக்கிறார். இதற்கு ஆழ்ந்த பல காரணங்கள்

இருக்கலாம். அமெரிக்க வியாக்யானக்காரர்கள் இதைப்பற்றி கூறும்போது நேசநாட்டு யுத்த தந்திரத்திலேயே பெரும் மாறுதலேற்பட்டிருப்பதாகச் சொல்லுகின்றனர்.

சில வாரங்களுக்கு முன்வரை அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் உள்ள யுத்த வியாக்யானக்காரர்கள், நேசநாடுகள் தங்கள் வசமுள்ள யுத்த சாமான்களையும், மனிதர்களையும் நீண்டகால யுத்தத் திட்டத்திற்கு உட்படுத்தி 1934-ம்வருஷ கோடைகாலத்தில்தான் எதிரிநாட்டில் பெரும்வகையான படையெடுப்பைச் செய்வார்கள் என்று எண்ணியிருந்தார்கள்.

மிஸ்டர் சர்ச்சில், ஜனாதிபதி ரூஸ்வெல்டு, மற்றும் சில தலைவர்கள் பேசிய சொற்பொழிவுகளிலெல்லாம், சாமான்களும், மனிதர்களும் அதிகமாகும் வரை காத்திருக்கவேண்டுமென்றும் வற்புறுத்தியிருக்கிறார்கள். 1943-ம்வருஷ ஜூன் மாதத்தில் ஒருக்கால் இப்படையெடுப்பு நேருமென்றும் எதிர்பார்க்கப் பட்டிருந்தது.

ஆனால் பிரிடனிலும், அமெரிக்காவிலும் கடந்த சில வாரங்களாக நடந்த முன்னேற்றத்தைப் பார்த்தால் முக்கிய எதிரியான ஜெர்மனியை 1942-ம் வருஷத்திலேயே தோற்கடித்து விடலாமென்று தெரிகிறது. அதற்காக நேசநாடுகளின் வசமுள்ள எல்லா மனிதர்களையும், சாமான்களையும் ஒன்றுசேர்த்துவிடவேண்டும். இவ்வித மனோபாவம் ஏற்பட்டதால் திட்டத்திலும் மாறுதல் செய்யவேண்டிய தாயிற்று.

ஐரோப்பாவில் அச்சு நாடுகளை எதிர்ப்பதற்கான திட்டங்கள் யாவும் பரிசீலனை செய்யப்பட்டு சாதகமான அம்சங்கள் கண்டுபிடிக்கப்படவேண்டும். மேலும் அமெரிக்காவிலும், பிரிடனிலும் யுத்த சாமான்களைத் துரிதமாக உண்டுபண்ணி உடனே உபயோகத்திற்கு லாயக்காகச் செய்யவேண்டும். நெடுங்கால திட்டத்தை இரண்டாம் பக்ஷமாக வைத்துக்கொள்ளவேண்டும்.

## திட்டத்தையும் அதிகரித்துவிட்டது.

சமீபத்தில் கிடைத்த செய்திகளைப் பார்த்தால் சில மாதங்களுக்கு முன் போடப்பட்ட திட்டத்திற்கு அதிகமாக அமெரிக்க யுத்த சாமான்கள் தயாராகி விட்டதாகத் தெரிகிறது. ஆகவே சும்மாயிருக்கும் தொழிற்சாலைகளுக்கு வேலை சம்பாதிப்பது பிரச்னையாக இருக்கிறது. இந்தக் காரணத்தை முன்னிட்டும் தற்போது சாமான்களை உற்பத்தி செய்யவேண்டும்.

சிலவாரங்களுக்கு முன்பு கப்பல் கட்டுவது கொஞ்சம் தயக்கமாகக் காணப் பட்டது. அதுவும் இப்போது திருப்திகரமாக இருக்கிறது. வேலை துரிதமாக நடப்பதால் கப்பல் கட்ட நேரும் மொத்த காலவரை குறைக்கப்பட்டு வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ரூஸ்வெல்டு அமெரிக்க சைனியத்திற்கு எல்லா இடங்களிலும் விமானமூலம்போக அனுமதி கொடுத்திருப்பதும் அமெரிக்க திட்டத்தில் ஒரு மாறுதலைக் குறிக்கிறது. பிரயாணிகளின் போக்குவரவைக் குறைத்து சைனியம் அதிகமாக நடமாடச் செய்வதிலிருந்து கூடிய சீக்கிரம் முன்னேற்றப் போர் நடக்குமென்றே சொல்லலாம்.

# ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்திலுள்ள முஸ்லீம்கள்.

# ஹிட்லர் கைவசப்படாமல் தப்பித்துக்கொள்ள அவர்களுக்கும் பொறுப்பு இருக்கிறது.

ஸோவியத் ஐக்கிய அரசாங்க தற்காப்பில் முஸ்லீம் ஜனங்களும் ஏராளமாக பங்கு எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். போர்முனையில் எல்லாப் பகுதிகளிலும் ஏஸர்பைட்ஜான், டர்க்மேனியா, யூஸ்பேகிஸ்தான், காஸாகிஸ்தான், கிட்கிஸியா, டாட்டாரியா, பாஷ்கீரியா, டாகேஸ்தான் இன்னும் மற்ற கிழக்கிலுள்ள ஸோவியத் குடியரசு நாடுகளிலிருக்கும் மனிதர்களைக் காணலாம். அவர்களில் அநேகம் பேர்களுக்கு ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்திலிருந்து ராணுவ கௌரவப் பரிசுகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்தின் 123-வது விதிப்படி உயர்வு, தாழ்வு, கிடையாது. எல்லோருக்கும் சம உரிமையுண்டு. எல்லா பாஷைகளைப் பேசும் ஜனங்களும் சம பதவியைப் பெற்றிருக்கிறார்கள். குடியரசு நாடுகளில் ராஜாங்க பாஷை ருஷ்ய பாஷையும், அங்கு பெரும்பான்மையாக இருக்கும் ஜனங்களின் பாஷையும்தான். 1941-ம் ஹூ ஜனவரி மீ 1-ம் தேதி ஏஸர்பைட்ஜானியன், டார்டார், ஊஸ்பக், டர்க்மேனியன் இன்னும் மற்ற முஸ்லீம் பாஷைகளில் பயிற்சியளிக்கும் பள்ளிக்கூடங்களில் 1,69.21,900 மாணவர்கள் இருந்தார்கள். ஆனால் இந்த எண்ணிக்கையில் ஐக்கிய அரசாங்கத்தின் மற்ற பாஷைகளில் பயிற்சி அளிக்கும் பள்ளிக்கூடங்களில் படிக்கும் முஸ்லீம்களின் எண்ணிக்கை சேரவில்லை. கிட்கிஸ், டார்டார் இன்னும் அதைப்போல் பாஷைகளில் பயிற்சியளிக்கும் பள்ளிக்கூடங்களில் படிக்கும் ருஷ்யர்கள், இன்னும் மற்ற ஜாதியார்கள் இவர்களின் எண்ணிக்கையும் அதில் சேரவில்லை.

### சுயேச்சையான தேவாராதனை.

ஸோவியத் அரசாங்கத்தின் 124-வது விதிப்படி எல்லா நகரவாசிகளும் சுயேச்சையாக தங்களிஷ்டம் போல் மதவழிபாடுகள் செய்யலாம். இதனால் வீடுகளில் மதசம்பந்தமான கல்விப் பயிற்சி பெறலாம். ஷியா, ஸன்னி வகுப்பு முஸ்லீம்கள் மசூதிகளுக்கும் போகலாம். ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்தில் முஸ்லீம்களுக்கு மத்திய ஸ்தானம் பாஷ்கிரியாவில் ஊஸா என்னும் நகரம்தான். அங்குதான் அவர்களின் மதகுரு இப்பொழுதுள்ள 'முல்லா அப்துல் ரகிமான் ரஸூல்லாயேவ்' என்பவரின் ஸ்திர வாஸஸ்தலம்.

ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்தில் 1,312 மசூதிகள் இருக்கின்றன. அவைகளில் 8,052 முல்லாக்கள். 282 ஷேக்குகள் 528, இஷான்கள் ஆகிய இவர்கள் இருக்கிறார்கள். இவர்களில் ஸன்னி, ஷியா, இஸ்மேல் இந்த வகுப்புகளைச் சேர்ந்தவர்களும் இருக்கிறார்கள்.

ஸோவியத் ஐக்கிய அரசாங்கத்தில் முஸ்லீம் ஜனங்களின் கல்வி பயிற்சி வெகு துரிதத்தில் முன்னேற்ற மடைந்திருக்கிறது. மத்திய ஆசியா குடியரசு நாடுகளான உஸ்பிகிஸ்தான், டர்க்மேனிஸ்டான், டாட்ஜீக்கிஸ்தான், கிட்கிஸியா, காஸாகிஸ்தான் இவைகளில் 1941-ம் ஹூ ஜனவரி மீ 1-ம் தேதியில் 140 பள்ளிக்கூடங்களிருந்தன. அவற்றில் 103 அந்தந்த ஊர் ஜனங்களின் பாஷையைப் பயிற்சியளிக்கும் பள்ளிக்கூடங்கள். இந்தக் குடியரசு நாடுகளில் 7,407 வாசக சாலைகள், 8,442 சங்கங்கள், 53 கண்காக்ஷி சாலைகள் இருந்தன.

முஸ்லீம் ஜனங்களின் பாஷைகளும், அவர்களின் பழைய இதிகாசங்களும் புதிப்பிக்கப்பட்டன. ருஷ்ய பாஷையிலும், யூக்ரேனியா பாஷையிலும், இன்னும் அந்நிய பாஷையிலும் புராணங்கள், டார்கோ டார்டார் ஜனங்களின்

பாஷைகளில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கின்றன. இந்த முஸ்லீம் குடியரசு நாடு களில் கல்வி அறிவில்லாதவர்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. 1926-ம் வருஷத்தில் டர்க்மான் குடியரசு நாட்டில் கல்வியறிவு பெற்றவர்களில் ஆண் களில் 16·5 சதவிகிதமும் பெண்களில் 7·7 சதவிகிதமும், இருந்தார்கள். 1936-ம் வருஷத்தில் ஆண்கள் 75·3 சதவிகிதமும், ஸ்திரீகள் 60·6 சதவிகிதமும் இருந்தார் கள்.

## உயர்தரப் படிப்பு.

மற்ற குடியரசு நாடுகளிலும் நிலைமை இம்மாதிரிதான். 1939-ம் வருஷம் ஜனக்கணித கணக்குப்படி ஏஸர்பைட்ஜான் குடியரசு நாட்டில் 32,00,000 ஜனத்தொகைக்கு 2,500 பேர்கள்தான் உயர்தர கல்விப் பயிற்சி பெற்றவர்கள். டர்க்மான் குடியரசு நாட்டில் 12,54,000 ஜனங்களுக்கு 4,000 பேர்களும், காஸாக் குடியரசு நாட்டில் 61,00.000 ஜனங்களுக்கு 28,000 பேர்களும் உயர்தரக் கல்விப் பயிற்சி பெற்றவர்கள்.

முஸ்லீம் பிராந்தியங்களில் அநேக உயர்தரக் கல்வி ஸ்தாபனங்கள் ஏற் படுத்தப்பட்டிருக்கின்றன. காஸாகிஸ்தான் தலைநகர் ஆல்மேட்டாவில் 7-ம், ஏஸர்பைட்ஜான் தலைநகர் பாகூவில் அரசாங்க சங்கீத வித்தியாசாலையை விஞ 8-ம், உஸ்பேகிஸ்தான் தலைநகர் டாஷ்கெண்டில் மத்திய ஆசியா ஸர்வகலா சாலையுடன் சேர்த்து 14-ம் கல்வி ஸ்தாபனங்களிருக்கின்றன. ஸோவியத் விக்ஞான சாஸ்திர கலாசாலைகள் குடியரசு நாடுகளில் அநேக கிளைஸ்தாபனங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. அவைகளில் முஸ்லீம் விக்ஞான சாஸ்திர நிபுணர்கள் வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

ஆகையால் மத்திய ஆசியா, காகேஷியா, வோல்கா அடிவாரம் இவைகளிலுள்ள ஸோவியத் முஸ்லீம்களுக்கு ஹிட்லருக்குக் கைவசப்படாமல் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் இருந்து வருகிறது.

# புதுக்கோட்டை ஸமஸ்தான தேசீய யுத்த முன்னணி நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

---

## பிரஸங்கம் 99—(1-வது பிரிவு).

| 1942— | | | | | மணி. |
|---|---|---|---|---|---|
| ஜூன் | ...14, ஞாயிற்றுக்கிழமை. | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| | | பூவரசகுடி | ... | ,, | 6.00 |
| | | வேங்கடக்குளம் | ... | ,, | 6.30 |
| | 15, திங்கட்கிழமை ... | திருமயம் | ... | ,, | 6.00 |
| | | மேலூர் | ... | ,, | 6.30 |
| | 16, செவ்வாய்க்கிழமை | பெருங்களூர் | ... | ,, | 6.00 |
| | | ஆதனக்கோட்டை | ... | ,, | 6.30 |
| | 17, புதன்கிழமை ... | அரிமளம் | ... | ,, | 6.00 |
| | | கீழாநிலைக்கோட்டை | ... | ,, | 6.30 |
| | 18, வியாழக்கிழமை .. | உடையாளிப்பட்டி | ... | ,, | 6.00 |
| | | கிள்ளுகோட்டை | ... | ,, | 6.30 |
| | 19, வெள்ளிக்கிழமை ... | அம்புக்கோவில் | ... | ,, | 6.00 |
| | | ரெகுநாதபுரம் | ... | ,, | 6.30 |

## பிரஸங்கம் 100—(2-வது பிரிவு).

| | | | | |
|---|---|---|---|---|
| 20, சனிக்கிழமை ... | டவுன் ஹால் | ... | மாலை | 6.30 |
| 21, ஞாயிற்றுக்கிழமை. | வயலோகம் | ... | ,, | 6.00 |
| | குடுமியாமலை | ... | ,, | 6.30 |
| 22, திங்கட்கிழமை ... | நல்லூர் | ... | ,, | 6.00 |
| | மண்டையூர் | ... | ,, | 6.30 |
| 23, செவ்வாய்க்கிழமை. | நச்சாந்துபட்டி | ... | ,, | 6.00 |
| | விராச்சிலை | ... | ,, | 6.30 |
| 24, புதன்கிழமை ... | வெங்களூர் | ... | ,, | 6.00 |
| | கோனுபட்டு | ... | ,, | 6.30 |
| 25, வியாழக்கிழமை ... | பனையப்பட்டி | ... | ,, | 6.00 |
| | ராங்கியம் | ... | ,, | 6.30 |
| 26, வெள்ளிக்கிழமை... | கொடும்பாளூர் | ... | ,, | 6.00 |
| | விராலிமலை | ... | ,, | 6.30 |

Sri Brihadamba State Press, Pudukkottai. 2,500—16-6-42.